உ

சிவமயம்

# "திருநாளைப்போவார்"

என்னும்

# நந்தனார் சரித்திரம்

காப்பு

வெண்பா

கந்தன் றனையளித்த காதலனார் பேறுபெற்ற
நந்தன் சரித்திரத்தை நானியம்பச்—சுந்தரஞ்சேர்
தில்லைமணிக் கோபுரத்திற் றேடிவளர் கற்பகத்தான்
அல்லும் பகற்றுணையே யாம்.

சீன்-1. இடம்-ஆதனூர் சேரிக்கடுத்த வயக்காடு.

நடிகர்கள்:—தொப்புளான், தாண்டவராயன், பாவாடை, படவேட்டான், நந்தன், ஏகாத்தா, மாரியாத்தா.

[தொப்புளான், தாண்டவராயன், பாவாடை, படவேட்டான், நால் வரும் அமர்ந்திருக்கத் திரைமேலேறுகிறது]

தொப்புளான். வ-ம்:—எண்டாண்ணே பாவாடே! இந்தப் பாயும் வாய்க்கால்லே தண்ணி வரண்டுபோச்சு. நம்ப வயலுக்கு எண்ணிக்டா தண்ணிவர்ர மொற.

பாவாடை. வ-ம்:—எயவு எண்ணிக்கி வருமோ தெரியிலே. கெணத்திலே எரைக்கிர்ரதின்னு எவனாலே ஆவுது.

தாண்டவராயன். வ-ம்:—நம்ப எசமாங்களும் தண்ணியைபத்தி அந்த தலைப்பா மாட்டி உத்தியோகஸ்தருங்களே கேக்ரதில்லே. தண்ணி எரைச்சியா? தண்ணி எரைச்சியா இண்ணு நம்ப ளோடே எயவு குடுக்ராங்கோ.

படவேட்டான். வ-ம்:—அதுக்கிட்டுண்டா! இந்த நந்தன் பயகிரானே நடவு வேலையைப் பாக்ரதேயில்லே. திம்முபுடிச்சாப்போலே கிரான். அந்த கிட்டு பாப்பான் வேள வேளக்கி பாப்பார சாப்பாடு போட்ரான். எம்மவன் நல்லா துண்ணுட்டு என்னமோ வாயிலே முணுமுணுண்ணு சொல்லிக்கினு சேரியை சுத்தி

வர்ரான். அந்த பாப்பார ஆண்டே வந்து வயலப் பாத்தா என்ன சொல்ருனே என்னடா எய்வு நாப்பது வேலி பூமி அப்படியே வைச்சிருக்கானடா எம்மவன்.

தொப். வ-ம்:—அடடே! படவேட்டான் நம்பசேரியிலே நந்தன் சாமி மேலே பத்திபண்ருண்டா. எம்மவன் கள்ளுத் தண்ணியை குடிச்சூட்டு பாப்பான் வூட்ளே மீதி சோதியை சாப்புடேட்டு ஆதனூரை சுத்தி வர்ரான். அந்த ஐயனுக்குத் தெரிஞ்சா எங்கப்பாண நந்தன்சாமிபாடு கஷ்டந்தான்.

பாவாடை. வ-ம்:—கெடக்குடுண்டா பொயுது போவுது எங்கூத்தி யாரு இன்னங் கயிஞ்சி கொண்டார்லே. சேரியிலே என்னடா செய்யுராங்க இந்த சிறுக்கிங்க.

[ஏகாத்தா மாரியாத்தா உள்ளிருந்த படியே சத்த மிடுகிருள்]

ஏகாத்தா. வ-ம்:—எ மாமா மாமாச்சி கயிஞ்சிகொண்டாந்தேன்.

பாவாடை. வ-ம்:—எம்மவளே! வாடி யிப்படி சூரியன் மேக்கே பூட்டான். இப்பத்தான் கயிஞ்சி கொண்ணுந்தாளாம். வாடி வாடி எங் கூத்தியாரே.

## ஏகாத்தா மாரியாத்தா பாட்டு

### (உழுதப் புழுதி என்ற மெட்டு)

கயிஞ்சிகொண்டு வந்தேனடா எந்தன் மாமா நீ
கைகழுவிக்குடிக்கவாடா எந்தன் மாமா
புயிஞ்சபழஞ்சோறுடா எந்தன் மாமா தண்ணி
போட்டுகொஞ்சம்துண் ணுப்பாரு எந்தன் மாமா
சுண்டாங்கி சுண்டக்கீரை எந்தன் மாமா அதைத்
துண் ணுகொஞ்சம்பாத்திடடா எந்தன் மாமா
கண்டங்கருவாடுடா எந்தன்மாமா வுன்
கள்ளுத்தண்ணிக்கேற்றதடா எந்தன்மாமா
ஆழாக்குநெல்லுகுத்தி எந்தன்மாமா நான்
ஆக்கிவந்தேன்வாளேமீனு எந்தன்மாமா
கூழைக்கரைக்கேயிலே எந்தன்மாமா சும்மா
கூச்சிலிட்டகாரணமேன் எந்தன்மாமா

பாவா வ-ம்:—அதெல்லாம் கீட்டுண்டி பொய்தெல்லாம் போச்சே சேரியிலே இந்நேரம் என்னடி செய்திங்கோ.

மாரியாத்தா. வ-ம்:—தே! மாமா நம்ப நந்தன் சாமிகிறுரே. அவ்ரு அங்கே சாமி மேலே பாட்டு பாட்ணுரிண்ணு! எம்மவன் என்ன பத்தியா பாட்ராண்டா மாமா!

தொப். வ-ம்:—ஏண்டி! நந்தன் சாமி பாட்டுபாட்ணு உனக்கின்னடி? எங்கூத்தியாரே! அவனையும் உன்னையும் சேரிக்கி பலி போட்டுடுவேன்?

ஏகாத். வ-ம்—ஆமாண்டா எம்மவனே அந்த நந்தன் பாட்டைக் கேட்டாக்கா தோமாமா அவனவுட்டுவர மனமில்லண்ணு.

பாவா. வ-ம்:—சர்தாண்டி! நந்தன் சாமிக்கி புடிச்சிக்ரே பேயி! ஒன்னபுடிக்கும்போல தெரியுது. எம்மவளே! அவன்மேலே கண்ணு போடாதடி.

பாவா. வ-ம்:—டேய் எங்கட்டை பையன்களா வாங்கடா கயிஞ்சி குடிக்க பொயிதெல்லாம் போச்சி சேரிக்கி போவனும்.

தாண்ட. வ-ம்:—வாங்கடா எங்கூத்தியாருங்களா எசமா மாருவரு வாங்க கயிஞ்சி குடிச்சுட்டு கயினிக்குப் போகலாம்.

[எல்லோரும் போகின்றனர் நந்தன் பிராப்தம்]

## நந்தன் பாட்டு

### தேவாரம்

தோடுடையசெவியன் விடையேறியோர்
தூவெண் மதிசூடி
காடுடையசுடலைப் பொடிபூசி என்
னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடையமலர்நான் முகன்மால்பணிந்
தேத்த வருள்செய்த
பீடுடையபிரமா புரமேவிய
பெம்மானிவ னன்றே

[தாண்டவராயன், தொப்புளான், படவேட்டான், பாவாடை இவர்கள் வெளிவந்து]

பாவா. வ-ம்:—அடடே! நந்தன்சாமி இதோ வந்தாருடா;

பட. வ-ம்:—ஏண்டா எம்மவனே நந்தா! என்னடாயிது எங்கூத்தியாரே சேரியிலே கிரே பொண்ணுங்கமேலே கண்ணுபோட்டியாமே,

தொப். வ-ம்:—எகாத்தா கயிஞ்சி கொண்ணுந்தா உன் சேதி எல்லாம் சென்னுடா எம்மவனே கயித்தே முரிச்சிடுவேன் தெரியுமா;

தாண். வ-ம்:—ஆமாண்டா நந்தா நீ இப்படியே சிவா சிவாண்ணி சேரியே சுத்திக்கிணியிருந்தா இந்த பாப்பாரசாமி கயிணிவேல எல்லாம் எப்பிடிடாபோறது ஒண்ணு ரெண்டா மூணு எங்கூத் யாரே நாப்பதுவேலி நஞ்சையை இப்படிபோட்டிட்டியே வாய்க் காவிலே தண்ணிவத்திட்டுது ஏருழலே பரம்படிக்சிலே நாத்து பரவுலே எண்ணுடா நந்தா உன்சேதி.

## நந்தன் பாட்டு

(ஐயாவேதியரே என்ற மெட்டு)

பல்லவி

ஐயோ சிநேகிதரே என
தருமை சோதரரே எனக்
கானசேதி ஞானமீதி
லாசை கண்டீரே

அநுபல்லவி

மெய்யானவேதியரின் வேலைக்கர்ரப்பறையன்
வேண்டியே புகல்வேனென்று
விநயமாகக் கேளும் மன
மகிழ்வுடன் நாளும் எனக்
கானசேதி ஞானமீதி
லாசை கண்டீரே

சரணம்

ஐயனென்னயடிமைகொண்ட துய்யனொருவன்மேலுண்டு
செய்யும்வேலை யவனுக்கிந்த
தேகங் கொண்டேனே மனச்
சோகங் கொண்டேனே எனக்
கானசேதி ஞானமீதி
லாசை கண்டீரே

வ-ம்:—சகோதாரே வேதியர்க்கு நான் வேலைக்காரனென்றும் வே ளாண்மைக்கேற்ற பூமியை உழுது பயிர் செய்யவேண்டுமென் றும் எனக்கு புத்திபுகட்டுகின்றீர்கள். நீங்கள் கூறுவதுண் மையே. ஆயினும், என்னை அடிமைகொண்ட ஐயன் மான்மழு வேந்துங் கையன், மதிநதியணியுந் துய்யன், மஹாதேவன், உமாதேவன் என்னும் சர்வேஸ்வரனுக்குத் தொண்டு செய் யவே என்மனம் பேராவல் பெற்றுளது. இதை மாற்றவல்லார் யாவர்?

படவேட். வ-ம்:—அட எம்மவனே! என்னடா எய்வு; என்னென்ன செல்ராண்டா.

தொப். வ-ம்:—ஆமாம்; நந்தா! அந்தப் பாப்பான் வந்து கேட்டா என்னடா செய்வே.

தாண். வ-ம்:—எங்கூத்தியாரே! ஒடம்பெல்லாம் சாம்பல பூசிக்கினு ஊரெல்லாம் சுத்தி கதை பேசிக்னு ஒயிங்காக்கிலாமிண்ணு பாக்ரியாடா.

பாவர்டை. வ-ம்:—ஆமாண்டா செவா செவாண்ணுசொல்லி அய்வுரே அத்தோடே எங்கூத்தியாரே என்னடா ஒடம்பெல்லாம் சாம்பல பூசுரே; பரதேசிங்க சங்யாசிங்காட்டமா.

நங். வ-ம்:—சகோதரரே! என்ன மதியீனமாய்ப் பேசுகின்றீர்கள். ஐயோ சாம்பலாயிது; இதன் மகிமையை உங்களுக்குச் சொல்கிறேன் கேளுங்கள்.

சராசரமெங்கும் நிறைந்த பராபரப் பொருளாம்; பரமசிவனின் தேகத்தில் ஜொலிக்கும் வெண்பொடியன்றோ இது. இதன் பெயர் திருநீறு என்பதாகக் கூறுவர். இத் திருநீற்றை சாமான்யமாக நினைக்கவேண்டாம்.

## நந்தனர் பாட்டு

### தேவாரம்

மந்திரமாவதுநீறு வானவர்மேலதுநீறு
சுந்திரமாவதுநீறு துதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறு சமயத்தில்காப்பதுநீறு
செந்திருவாயுமைபங்கன் திருவால்வாயான்திருநீறே

வ-ம்:—இத்யாதி பெருமைபொருந்திய இத் திருநீற்றுக்கிணை இவ்வுலகிலுண்டோ.

பாவா. வ-ம்:—அடே எய்வுமவனே! எப்டிஎப்டி செல்ராண்டா. அடே நந்தன்சாமி! பொய்தெல்லாம் போச்சி தொலேஞ்சி போடா. அந்தக் கிட்டுபாப்பான் சாப்பாடு வைச்சிக்னு இருப்பான்.

பட. வ-ம்:—ஆமாண்டா வேல சேஞ்சவன்கணக்கா போய் துண்ணூட்டு சேரிக்கி வாடா.

நங். வ-ம்:—சகோதரர்களே! உங்களிஷ்டப்படியே ஆகட்டும். செல்லுங்கள் வருகிறேன்.

[எல்லோரும் போகின்றனர்]

(சீன் முடிவு)

சீன்.—உ. இடம்:—ஓர் வீதி

நடிகர்:—நந்தன், கிட்டுஐயர்.

[திரைமேலேறுகிறது நந்தனும் கிட்டுவும் எதிரெதிராக வந்து சந்திக்கின்றனர்.]

நந். வ-ம்:—சுவாமி! நமஸ்காரம்.

கிட்டு. வ-ம்:—ஏண்டா பறப்பயலே எங்கிருந்து வருகிருயடா.

நந். வ-ம்:—கிட்டையரே வயலைச்சுற்றிப்பார்த்து வருகிறேன்.

கிட். வ-ம்:.—என்னடாயிது சற்றுமுன் படவேட்டானைப்பார்த்து உன்னை விசாரித்தேன். காலைமுதல் கழனிக்குப் போகவில்லை யாம். அடே நந்தா நாற்பது வேலிபூமி ஏருழுவதெப்போ. பரம் படிப்பதெப்போ. நாத்துப்பாவி நடவுசெய்வதெப்போ. ஏரி குளங்களில் ஜலம் வற்றிவிட்டது. காலாகாலத்தில் பயிர்செய் யாமல் நஞ்சைகளைப் பாழாக்கிவிட்டிருப்பது நல்லதா அடே உன்னால் முடியாமற்போனாலும் மற்ற பறையர்களையாவதுவிட்டு வேலையை கவனிக்கச் சொல்லக்கூடாதா. ஆத்தையர் கேட்டா என்னடா பதில் சொல்வாய்.

நந். வ-ம்:—என்னமோ என்மனம் சிலநாளாக ஈஸ்வரத்தியானத் தில் ஈடுபட்டிருக்கிறது. வேறு ஞாபகமில்லை வேலையின் கவன மில்லை. என்செய்வேன்.

கிட். வ-ம்:—பக்தி முத்திவிட்டதோ. ஆமாமடா பிராமணன் வீட்டு போஜனமல்லவா. அது வுன்னை பக்தியில் இழுத்துவிட்டது. படுவாப்பயலே. மரியாதையாக வேலையைக் கவனித்தாலாச்சு இல்லையானால் உன்னை என்னசெய்கிறேன் பார்.

நந். வ-ம்:—உத்திரவின்படி காலைமுதல் வேலையை ஒழுங்காய் செய் கிறேன் சுவாமி.

கிட். வ-ம்:—ஆமாண்டா நந்தா மகா பக்தனைப்போல் தேகமெங்கும் விபூதியைப் பூசி சிவசிவவென்று ஸ்தோத்திரம் செய்துகொண் டிருக்கிருயே. இதென்ன வெளிவேஷமா. அல்ல உன்வினையனு கூலமா.

நந். வ-ம்:—கிட்டையரே! வேதோத்தமராகிய தங்களது சிநேகப் பான்மையோ அல்லது என் விதிவசத்தன்மையோ. அன்றி எனது மூதாதையரின் புண்யபயனே வேறெதுவோ தெரியேன். கருணையங்கடலாம் கண்ணுதற்கடவுளின் திருவடிக்கடிமைபூண் டொழுகும் ஸ்திர புத்திபெற்றேன். ஆதலின்

## நந்தனார் பாட்டு

தேவாரம்

ஓவுநாளுணர் வழியுநாளுயிர்
போகுநாளுயர் பாடைமேல்
காவுநாளிவை என்றலார்கரு
தேன்கிளர்ப் புனற்காவிரி
பாவுதண்புனல் வந்திடிற்பாஞ்
சோதிபாண்டிக் கொடுமுடி
நாவலாவுன்னைநான் மறக்கினும்
சொல்லுநா நமச்சிவாயவே (ஓ)

வ-ம்:—என்றைக்கேனும் ஒருநாளைக் கழிந்துபோகும் இவ்வுடலிருக்கும் வரையில் சிவநாமபாராயணம் செய்து, திருச்சந்நிதான மூர்த்திகளைப் பூசித்து, சிவனடியாரின் திருத்தொண்டு புரியவே எண்ணி யிருக்கிறேன்.

கிட். வ-ம்:—எப்படியாவது தொலைந்துபோ; பொழுதாகிறது நான் போகவேண்டும். மாட்டுக் கொட்டாரத்தில் வழக்கம்போல் வைக்குமிடத்தில் உனக்கு வேண்டிய போஜன பதார்த்தங்கள் வைத்திருக்கேன்; வயிற்றை நிரப்பிக்கொண்டு சேரிக்குப்போய் சேர்; ஆத்தையர் தஞ்சைமாநகர் போயிருக்கார்; நாளைய மறு தினம் வருவார்; அவர் வாரதுக்குள்ளாக வயக்காட்டு வேலையைக் கவனி. (இருவரும் போதல்)

(சீன் முடிவு)

---

சீன்—3. இடம்—பஜனைமடம்.

நடிகர்:—பக்தகோஷ்டிகள், சிவராஜபாகவதர், நந்தன், ஏனைய பிரஜைகள்.

[திரைமேலேறுகிறது நந்தன் ஒருபக்கம் நிற்கிறான்; பக்தகோஷ்டிகள் உட்கார்ந்திருக்க, பாகவதர் பிரசங்கஞ் செய்கிறார்]

## சிவராஜபாகவதர் பாட்டு

(விளக்கிடு மீனாக்ஷி என்ற மெட்டு)

பல்லவி

திருவருள் ஞானானந்த விநோதமே
நடராஜமூர்த்தி தில்லைதனிலாடும் பாதமே (திரு)

அநுபல்லவி

அருமறைச்சங்கமே அத்வீதசிங்கமே
அன்பேவிளங்கும் ராமலிங்கமே
திருவருட்பாமழை செப்புந்தர்பார்மலே
திருவாதிரை பெருமானுரை தலமானதிலே
தெரிசனம் தெரிசனம்
ஜெனனமரணமே விமோசனம் (திரு)

சரணம்

நந்திப்பிரம்மாதியே நாடும்விபூதியே
நாலும்பணிந்து போற்றுங்கியாதியே
சந்தானபார்வதி தங்கும்பகீரதி
தானுட மானுட கோனுடல் செய்
தெரிசனம் தெரிசனம்
சங்கரலிங்க தியானமேதினம் (திரு)

பாக. வ-ம்:—நமப்பார்வதீ பதயே!

எல்லோரும்:—அரஹர மகாதேவா.

## பாகவதர் விருத்தம்

தில்லையைக்காணக் காசியிலிறக்கச்
சிறக்கும்ஆரூர் தனிற்பிறக்க
எல்லையிலொருகா லருணையைநினைக்க
எய்தலா முத்தி. .... .... ....

வ-ம்:—இறக்க முத்தி, பிறக்க முத்தி, நினைக்க முத்தி, தெரிசிக்க முத்தி தரக்கூடிய க்ஷேத்திரங்களில் சிறந்ததும், சிற்சபை பொற்சபை நடனசபை என்னும் சபாமகிமையுடையதும், திருத்தில்லை சிற்றம்பலம் புலியூர் என்னும் பற்பல அற்புத நாமம் பெற்றதும் நந்தி மத்தளம் போடவும் நாரதர் வீணை பாடவும் இந்திர சந்திர கந்தர்வ தேவேந்ராதி தேவர்கள் அரஹர வென்று சிரமேற் கரங் கூப்பிப் பாடவும் மாகாளியுடன் வாதாடி நடனஞ் செய்த ஸ்ரீ நடராஜப்ரபு வசிக்கும் சிதம்பர க்ஷேத்திரத்தை ஒரு நாள் ஒரு பொழுதேனும் தெரிசிக்கும் பாக்கியம் பெற்றோர்க்கு சகலாரோக்கியமுங் கிடைக்குமென்பதில் தடையுண்டோ? ஆதலின், சிவநேசச் செல்வர்களே நமது மானிடப் பிறவியின் மாயவிருளாம். பிறப்பிறப்பு நீங்கி பெறுதற் கரிய மோக்ஷசாம்ராஜ்யம் பெற விரும்புவீரேல், ஒவ்வொருவரும் மார்கழி மாதத் திருவாதிரை நக்ஷத்திரத் திருநாளில் பவனி

வரும் ஸ்ரீ நடராஜப் பெருமானின் தெரிசனஞ் செய்மின் நமப் பார்வதீபதயே.

[எல்லோரும் அரஹர மகாதேவா வென்று காலக்ஷேபம் முடித்துப் போகின்றனர். நந்தன் கீழ்விழுந்து பணிந்தெழுந்து]

நங். வ-ம்:—இன்றுதான் என் ஜென்மசாபல்யமானது இப்போ திங்கு சிவநாமகீதங்களைப் பாடி ஸ்ரீ நடராஜப்பெருமானின் வைபவங்களைப் புகழ்ந்து பேசிய அடியார்களைத் தெரிசித்தமாத்திரத்தில் என்னுடைய உள்ளம் பூரித்து ஆனந்த பரவசமானேன்.

எம்பெருமான் திருவிளையாடலை கேட்கக் கேட்க பக்தி மேலிடுகிறதென்றால் அவரது பாததெரிசனத்தைப் பார்த்தமாத்திரத்தில் பாபவிமோசனமாகு மென்பதற்குத் தடையுண்டா?

ஒப்புயர்வற்ற இவ்வுலகத்தில் அரிதரிது மானிடராதலரிது. அதனினுங் கூன், குருடு, செவிடு, பேடுநீக்கிப் பிறப்பதரிது பிறந்த காலையில் ஞானமுங் கல்வியும் நயத்தலரிது, என்பதுபோல் சர்வாங்கலக்ஷணனாய் அரிதாகிய இம் மானிடப்பிறப்பில் அவதரித்தும், சர்வேஸ்வரனைப் பணியும் பாக்கியம் பெற்றும், மகா பாபிகளாகிய பறையர் குலத்தில் பிறந்தேனே பாபி. இந்த நீச்சனுக்கும் கனகசபாபதியினுடைய தெரிசனங் கிடைக்குமா?

ஐயோ இதென்ன பிறப்பு; முன் ஜென்மத்தில் என்ன துன்பமிழைத்தேனோ இந்த ஜென்மத்தில் சகலரும் இகழப்பட்ட இப்புலையனாய்ப் பிறந்தேன். ஹே ஜெகதீசா! தேவிசமேதா! திவ்ய மலர்ப் பாதா! சிதம்பரநாதா! தினகரஜோபிதா! காமதகனா! கண்மூன்றுடைய கண்ணுதலே! உனது பாத தெரிசனத்திற்குப் பாத்திர னல்லாத பாவிப் பறையனுக்கிந்த மானிடாவதார மெதற்கு.

## நந்தனர் விருத்தம்

புல்லாய்ப் பிறந்தாலு மிருகாதி ஜெனனங்கள்
  பசியாறி மகிழு மன்றோ
பூண்டாய்ப் பிறந்தாலும் புலத்தியர்கள் கொண்டுசில
  பிணிதீர்த்து மகிழ்வ ரன்றோ
கல்லாய்ப் பிறந்தாலு நல்லவர்கள் மிதிகொண்டு
  காக்ஷிக் குறுத்து மன்றோ
கழுதையுரு வந்தாலுங் காவெனக் கத்தினாற்
  கைக்கண்ட சகுன மென்பார்
எல்லா மிலாமலே இப்பிறவி தந்தென்னை
  யேங்கவிட் டகல நின்றால்

எத்தனைத் தந்தையின மெத்தனை அன்னையின
மெத்தனைப் பிறவி வருமோ
அல்லலெனு மாசறுத் தாட்கொள்ளுந் தெய்வமே
அப்பனே தில்லை நகர்வாழ்
அதிபதி ஜனகாதி துதிபதி சிவகாமி
அன்பிலுறை நடன பதியே.

வ-ம்:—ஈசா! கனகசபேசா! எல்லாம் நினது திருவருள். என்னைத்தானுந்து பிரயோஜனமென்ன. அன்றி, உன்னைத்தானுந்து பலனென்ன. அவரவர்வினைபி லவரவர் வருவாரென்பது பொய்யாகுமா?

சுவாமி! அடியேனது ஜென்மமீடேற நினது பாத பத்ம தெரிசனம் பெறவும், நினது சேவையைக் காணவும் இதோ திருப்புங்கூர் க்ஷேத்திரம் வருகிறேன். தேவதேவா! மகானுபாவா! ஜெகப்ரதாபா! சித்விலாசா! சிற்சபேசா! கயிலாசவாசா! இந்த ஏழை மேல் திருவருள்புரிந்து பாதபத்ம தெரிசனம் தரவேண்டும்.

## நந்தன் பாட்டு

(ஏழைமேலின்னும் என்ற மெட்டு)

பல்லவி

சாமி—ஆடிய ாதத்தைத் தாருமே
ஆதியே ஜோதியே அடிமை எனக் (கா)

அநுபல்லவி

தேடுமாலயன் சேடனுதியோர்
சேவைகண்டெதிர் சிவசிவவெனவே (ஆ)

சரணம்

தாம்தக்கிடகிட தாம் ஜெணுத்ஜெணு
தாம்தத்திமிதிமி தாமெனவே
பாம்பணியுஞ்சடைதான் குலுங்கநமப்
பார்வதிபஜே வென்றுதில்லையில் (ஆ)

மானிடத்தில்வரு மாய்கை எனும்பிணி
மாளவுங்கிருபையே செய்யவும்
தானமீவுசங்கர லிங்கேச
சம்போசதாசிவா சிதம்பரத்தில் (ஆ)

(சீன் முடிவு) [போகிறான்]

———

சீன்—4. இடம்—பறையர்சேரி.

நடிகர்:—நந்தன், தொப்புளான், தாண்டவராயன், படவேட்டான், பாவாடை முதலிய பறையர்கள்.

தாண்டவ. வ-ம்:—அடே எம்மவனே தொப்ளான் எங்கடா நம்ப நந்தன் சாமியே ராத்திரி எல்லாம் சேரியிலேகாணும்.

படவேட். வ-ம்:—எங்கூத்யாரு அந்த ஆண்ட வூட்ளே சாப்டுட்டு எங்கேனுபடுத்து கெடப்பாண்டா எம்மவனுக்கு வெட்டியா வெசனமா.

தொப்பு. வ-ம்:—செவா செவா அராகரா இண்ணு செல்ரானே அதென்னு எய்வுடா.

பாவா. வ-ம்:—அடேடே அதோ பார்ரா என்னமோ பாட்டுகீட்டு பாடிக்கிணுவர்ரான் எங்கூத்தியாரு.

[எல்லோரும் பார்க்கின்றனர் நந்தன் வருகிறான்]

## நந்தன் பாட்டு

இராகம்-சங்கராபரணம், தாளம்-ரூபகம்.

பல்லவி

பக்திபண்ணிக் கொண்டிருந்தால்
முக்தி பெறலாமே (பக்தி)

அநுபல்லவி

எத்திசைக்கு மெவ்வுயிர்க்கும்
அவ்வுயிராய் நிறைந்திருக்கும்
வஸ்துவென்று அம்பலவன்
மலரடி தினந்தோறும் (பக்தி)

சரணம்

கட்டழகிச் சோரனிடங் காதலதுபோலே
கடுகிவருங்கன்றருகில் கபிலையதுபோலே
கட்டவரைத்துணியுமில்லா பேதையொருக்காலே
காவலனார்பதம்வருகிற் களிப்பதனைப்போலே (ப)

தொப். வ-ம்:—ஏண்டா கயிதமவனே என்னடா யிது. சேரியே பாய்பண்ண பாக்ரே. எங்கடா போன ராத்திரி நந்தா.

படவே. வ-ம்:—அடடே அவன் பேச்சுவாணும் கீச்சுவாணும் வாங்கடா போலாம்.

நந். வ-ம்:—சகோதரர்களே! நானென்ன வென்றுரைப்பேன். ஆஹா! நினைக்குந்தோறும் நெஞ்சில் நமச்சிவாயநாதன் நடராஜப் பெருமான் பாதத்தமுது படர்ந்து பரவச மடையச் செய்கிறதே. ஐயோ! உங்களுக்கே னப்படியில்லை.

படவே. வ-ம்:—ஆரம்பிச்சுகினுண்டா அவன் கதயே டேஎம்மவனே நந்தா என்னுடா எங்களுக்கு இல்லே. செல்ரா கேப்போம்.

நந். வ-ம்:—சகோதரரே! பரமேஸ்வரத் தியானஞ்செய்து அவனது பாதார விந்தம் சேர்ந்து பரமானந்தத் திருக்கும் பாக்கியம் உங்களுக்கில்லை.

தாண்ட. வ-ம்:—நந்தா! அதெல்லாம் ஏண்டா நம்பளுக்கு. அந்த பாப்பாரச் சாமிங்களுக்குத் தாண்டா அராவும் பராவும் வோணும் நம்க்கு ரெண்டு கள்ளுதண்ணி குடிச்சுட்டு கயினி வேல பாக்ரத்தான் வோணும்.

நந். வ-ம்:—நண்பர்களே! இந்த மூடபுத்தியை விட்டு விடுங்கள். என்னைப்போல் உங்களுக்குப் பக்திவுண்டாகும்படிச் செய்கிறேன் சம்மதந்தானு.

படவே. வ-ம்:—அடடே அவன் சொக்குப்பொடி போடப் பாக்ராண்டா நானு இப்பவே சொல்லிட்டேன். ஓடிப்பூட்ளாம் வாங்கடா.

நந். வ-ம்:—ஓடவேண்டாம். பயம் வேண்டாம். நான் சொல்வதைக் கேளுங்கள்.

பாவா. வ-ம்:—எம்மவனே சொல்லித் தொலேச்சுக்கோடா கேக்கலாம்.

நந். வ-ம்:—சகோதரரே! நாம் யார்?

படவேட். வ-ம்:—இதென்னுடா கேய்வி நம்ப யாருண்ணு பறயனுங்கோ.

நந். வ-ம்:—நாமேன் பறையராகப் பிறக்கவேண்டும்? சிலர் யேன் பிராமணராகப் பிறக்கவேண்டும்?

பாவா. வ-ம்:—நல்லாக்கிதே நம்ப அம்மா வவுத்லே பொறந்தா பறயனு பொறக்காதே பாப்பானுவா பொறப்போம்.

நந். வ-ம்:—இல்லை முற்பிறப்பில் செய்த பாவத்தால் இப்பிறப்பில் பிறந்தோம்.

படவே. வ-ம்:—ஓகோகோ முப்பொறப்பிலே புண்ணியம் பண்ணுக்கா பாப்பானு பொறப்பமோ,

நந். வ-ம்:—பிராமணனுய்ப் பிறக்காவிடினும் வேறு நம்மை விட வுயர்ந்த ஜாதியிலாவது பிறந்திருக்கலாம்.

தாண்ட. வ-ம்:-சர்தாண்டா சர்தாண்டா அதுக்குத்தான் புண்ணியம் பண்ணு புண்ணியம் பண்ணு இண்ணு ஊர்லே செல்ராங் கடா.

தொப்பு. வ-ம்:—இப்போ புண்ணியம் பண்ணுக்கா வர்ர பொறப் பிலே பாப்பானுய் பொறக்கலா மில்லா.

பாவா. வ-ம்:—அத்த கேள்ரா அப்படியே செய்லாம். புண்ணியம் பண்ணிட்டா போவுது.

நந். வ-ம்:—அன்பர்களே! புண்ணியம் என்பது தான தருமத்தில் சேர்ந்தது. தருமம்செய்து புண்ணியம்பெற நம்மிடம் தன மில்லை. ஆகவே ஈஸ்வரபக்தி செய்வோமாகில் புண்ணியம் செய்த பலன் பெறலாம்.

தாண்டவராயன். வ-ம்:—அதென்னடா பத்திதித்தி தெரியாதடா. எப்டிரா செய்ரது நந்தா.

நந். வ-ம்:—பகவானது பஜனுமிர்தத்தைப்பாடி அவரது பாதசேவை செய்வதே பக்தி.

பாவாடை. வ-ம்:—சாமிமேலே பாட்டு கீட்டு தெரியாதேடா. வேணும்ணு தெம்மாங்கு பாட்ளாம்.

நந். வ-ம்:—நான் சொல்கிறபடி சொல்லுங்கள். போதுமானது.

தாண்ட. வ-ம்:—ஆவுட்டும் ஆவுட்டும்.

நந்தன். அரகரசிவசிவ அம்பலவாணு

எல்லோ. கரகரசெவசெவ கஞ்சியும்வாணும்

நந். வ-ம்:—இல்லை. கரகரவல்ல செவசெவவல்ல (என்று சொல்லி விபூதியை அவர்கள் நெற்றியிலணிந்து)

நந்தன். அரஹர சிவசிவ அம்பலவாணு

எல்லோ. அரஹர சிவசிவ அம்பலவாணு

நந்தன். தில்லையம்பல தேசிகநாதா

எல்லோ. தில்லையம்பல தேசிகநாதா

நந்தன். புரமூன்றெரித்த பொன்னம்பலவாணு

எல்லோ. புரமூன்றெரித்த பொன்னம்பலவாணு

நந்தன். கரியுரிபோர்த்தக் கருணுகரனே

எல்லோ. கரியுரிபோர்த்த கருணுகரனே

நந்தன். அநுதினமன்றுளாடியபாதா
எல்லோ. அநுதினமன்றுளாடியபாதா
நந்தன். பிழைபொறுத்தாளும் புண்ணியமூர்த்தி
எல்லோ. பிழைபொறுத்தாளும் புண்ணியமூர்த்தி

நந். வ-ம்:—இதுதான் ஈஸ்வர ஸ்தோத்திரம் இதைப் பிரதிதினமும் பாராயணம் செய்தால் பக்தி வுதயமாகும்.

பாவா. வ-ம்:—ஆமாண்டா மந்திரம் சொல்லிட்டியே. இதுலே என்ன டாகீது. அந்த சாமியே பாக்கவாணுமாடா.

நந். வ-ம்:—ஆனல் எல்லோரும் நான் போகுமிடத்திற்கு என்னுடன் வந்தால் பகவானைக் காட்டுகிறேன்.

தொப்புளான். வ-ம்:—வாங்கடா போலாம் எங்கூத்தியாரு எங்க கூட்டிப்போரானே பார்ப்போம்.

நந். வ-ம்:—எங்குமில்லை. நம்மை இப்பிறப்பினின்றுங் காத்தருளும் பரம்பொருள் வசிக்கும் திருப்புங்கூர்ப் போய்வரலாம்.

பாவா. வ-ம்:—திருப்புங்கூர்போனு அங்க யார்ரா பாக்ரது சாமி எங் கடாகீது.

நந். வ-ம்:—நண்பர்களே! திருப்புங்கூர் க்ஷேத்திரத்தில் வசிக்கக் கூடிய அந்த,

## நந்தன் பாட்டு

### பல்லவி

சிவலோக நாதனைக்கண்டு
சேவித்திடுவோம் வாரீர் ஐயே (சிவ)

### அநுபல்லவி

பவமயங்களைப் போக்கியவர்
பரமசுகத்தைக் கொடுப்பாரந்த (சிவ)

வ-ம்:—சகோதரர்களே! பெறுதற்கரிய மானிடப் பிறவியைப்பெற்றும் அடைதற்கரிய மோக்ஷ சாம்ராஜ்ய பதவியைவிட்டு மண், பெண், பொன் என்னு மூன்ருசையாகிய,

### பாட்டு சரணம்

அற்பசுகத்தை நினைந்தோம்
அரன் திருவடி மறந்தோம
கற்பிதமான பிரபஞ்சமீது
கானல்சலம் போலயெண்ணி (சிவ)

வ-ம்:—நண்பர்களே! 'ஆசைக்கோரளவில்லை அகிலமெல்லாங் கட்டி யாளினுங் கடல்மீதிலே, ஆணைசொலவே நினைவரளகேச நிக ராக அம்பொன் மிக வைத்தபேரும், நேசித்து ரஸவாத வித் தைக் கலைந்திடுவர், நெடுநாளிருந்தபேரும், நிலையாகவேயினுங் காயகற்பந்தேடி நெஞ்சு புண்ணுவரெல்லாம், யோசிக்கும்வேளை யில் பசிதீர வுண்பதும் உறங்குவதுமாக முடியும்' என்று சொல் லக்கூடிய அந்த,

பாட்டு (ஷெ மெட்டு)

ஆசைக்கடலில் விழுந்தோம்
அறிவுக்கறிவை யிழந்தோம்
பாசமகல வழிதேடாமல்
பரதவிக்கும் பாவியானேம் (சிவ)

வ-ம்:—நண்பர்களே! பகவான் இந்த தேகத்தை நமக்கெதற்காக அளித்தாரென்பது தெரியுமா?

தொப். வ-ம்:—என்னடா! எய்வுமவன் கேக்ரதீ நம்ப ஒடம்புக்குக் கூட கேய்வியாடா.

தாண். வ-ம்:—அடடே! நம்ப தாய் தகப்பங்க நம்பளுக்கிந்த ஒடம்பு வளத்தாங்கோ.

பட. வ-ம்:—அடே! அதுக் கீட்டுண்டா நந்தா! நீ என்னசெல்ர.

நந். வ-ம்:—பகவான்! நமக்கிந்த தேகத்தைக் கொடுத்த தெதற்காக வெனில்,

பாட்டு (ஷெ மெட்டு)

மானிடஜென்மங் கொடுத்தார்-தன்னை
வணங்கக் கரங்களளித்தார்
தேனும்பாலும் போலேசென்று
தேரடியில் நின்றுகொண்டு (சிவ)

வ-ம்:—ஆகவே, இது சமயமே நாமனைவரும் சென்று திருப்புங்கூர் க்ஷேத்திரத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானைக் கண்டு பவ சாகரத் துன்பத்தை நீக்கிப் பலன்பெறுவோம். ஆதலால் நீங்கள்,

## நந்தன் பாட்டு

பல்லவி

எல்லோரும் வாருங்கள் சுக
மிருக்குது பாருங்கள் (எல்)

அநுபல்லவி

நல்லோர் துதித்திடும் தில்லையம்பல
நாதன் பாதம் பணிந்துகொள்வோம் (எல்)

(போகின்றனர்) (சீன் முடிவு)

---

## சீன்—5. இடம்—திருப்புங்கூர் சிவாலயம்.

**நடிகர்:—நந்தன், தாண்டவராயன், தோப்புளான், படவேட்டான், பாவாடை, அர்ச்சகர்.**

[திரைமேலேறுகிறது. அர்ச்சகன் சிவலிங்க பூசை செய்து சென்றபின், நந்தன் கூட்டத்தினர் வருதல்]

### எல்லோரும் பாடிக்கொண்டு வருதல்

அரஹரசிவசிவ அப்பலவாணா
தில்லையம்பல தேசிகநாதா
புரமூன்றெரித்த பொன்னம்பலவாணா.
கரியுரிபோர்த்தக் கருணாகரனே
அநுதினமன்று ளாடியபாதா
பிழைப்பொறுத்தாளும் புண்ணியமூர்த்தி

பாவாடை. வ-ம்:—அடே எங்கூத்யாரே! இத்தான் திருப்புங்கூரோ. இங்கே வந்துட்டோமா.

தாண்ட. வ-ம்:—ஆமாண்டா நந்தா! உம் பேச்சேகேட்டு வந்துட்டோம். கோயில்லே எப்படிடா போறது.

தொப்பு. வ-ம்:—உள்ளேபோனா எம்மவனே! அந்தப் பாப்பார ஆண்டைங்கெல்லாம் கொண்ணு போட்டுடுவாங்கோ.

பட. வ-ம்:—இந்த எயவுக்குத்தான் இவனோடே போவானுமிண்ணு சொன்னேன் எம்மவனுங்கோ கேட்டால்லா.

நந். வ-ம்:—சகோதரர்களே! உங்களுக்கேன் இந்த பயம்? இவ்விடத்திலே நின்று சுவாமி தெரிசனம் செய்யுங்கள்.

பாவா. வ-ம்:—எங்கேடா தெரியுது சாமியுமில்லே; கீமியுமில்லே; அதோ ஒரு பெரியமாடு படுத்திக்குது அத்தாண்டா.

தொப். வ-ம்:—எம்மவனே பேசாமே வாடா; சேரிக்குப் போயி நம்ப பறையங்கள பாத்து ரெண்டு கள்ளுதண்ணி குடிச்சூட்டு ஊருக்குப் போகலாம்.

நந். வ-ம்:—சகோதரர்களே! கோபம் வேண்டாம் சிறிதுபொறுங்கள்; (பறையர்கள் ஒருபுறமமற, நந்தன் சுவாமியை நோக்கி,) ஹே ஜெகதீசா! உமாமகேசா! கங்காதரா! பார்வதீஸ்வரா! பரம தயாளா! ஹே பகவான்! உனது திருச்சந்நிதானத்தைக் காண வேண்டுமென்று உள்ளன்போடு ஓடிவந்த நாயேனது அநித்திய தேகம் கடையேறும்பொருட்டு தெரிசனம் தரலாகாதா? சந்நிதானவாசலில் நின்று தெரிசிக்கும் பாக்கியமும் இப் பாவிக் கில்லையா? பக்தரக்ஷகா! பரமசொரூபா! பாபவிமோசனா! பாதாரவிந்த தெரிசனத்தைப் பார்க்கலாமென்றால்,

## நந்தனர் பாட்டு

**இராகம்-தன்யாசி, தாளம்-ஆதி.**

பல்லவி

வழிமறைத்திருக்குதே மலைபோலே ஒரு
மாடுபடுத்திருக்குதே (வழி)

அநுபல்லவி

பாவிப்பறையனிந்த ஊரில்வந்துமிவன்
பாவம்தீரேனோவுந்தன் பாதத்தில் சேரேனோ (வழி)

சரணம்

தோரடியில்நின்று தெரிசிக்கவேணும்-ஐயா
ஓரடிவிலகினால் போதும்போது மிதோ (வழி)

வ-ம்:—மலைபோன்ற மாடானது சந்நிதானத்தை மறைத்துப் படுத்திருக்கின்றதே பரமேஸ்வரா! அந்த மாட்டுக்குக்கிடைத்த பாக்யம் எனக்குக் கிடைக்கவில்லையே! அதனினுங் கொடிய பாதகனாய்விட்டேனா நான். தேவதேவ! திருப்புங்கூர் க்ஷேத்திரா!

## நந்தனர் பாட்டு

பாராயோ என்னைமுகம் பார்த்தொருகா லென்கவலை
தீராயோ வாய்திறந்து செப்பாய் பராபரமே. (பா)

எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணியேழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததினி போதும் பராபரமே. (எண்)

ஓயாதவென்கவலை உள்ளேயானந்த வெள்ளம்
பாயாதோவையா பகராய் பராபரமே. (ஓயா)

வ-ம்:—பராபரப்பொருளே! பரிபூரணானந்தமே! அடியார்க்கிரங்கும் ஆபத்சகாயா! வில்லாலடித்த விஜயனுக்கு பாசுபதாஸ்திரங் கொடுத்த பானுவே! கல்லாலடித்தவனைக் காத்துரக்ஷித்தக் கட

வுளே! காலாலுதைத்த கண்ணப்பனுக்குக்காக்ஷியளித்த கண்ணபிரானே! சுந்தரற்குத் தூதுசென்ற சொக்கலிங்கமே! இந்தப் பாவிப்பறையன் அடாதவனான அநிச்சன் பூமியோரிகழும் புலையன் அப்படியேதேனும் செய்த தவறுண்டா கல்லாலடித்தேனா வில்லாலிறுத்தேனா காலாலுதைத்தேனா தூதுபோகச் சொன்னேனா இல்லையே வேறு நான் செய்த அபசாரமென்ன?

அப்படியேதேனும் தவறுசெய்திருக்கினும் அதை க்ஷமித்தாள்வது தம் கடமையன்றோ பக்தரக்ஷகன் ஆபத்சகாயன் தீனதயாளன் அகிலமனைத்தையுங் காத்தளிக்கும் அம்மையப்பன் என்னும் பெயரானது என்பொருட்டுப் பொய்க்கலாமா சேய் செய்த குற்றம் தாய் பொறுப்பது நியாயமன்றோ திருவருள் புரிந்து தெரிசனம் தரவேண்டும். என் அப்பனே!

## விருத்தம்

வாழையடிவாழையென வந்ததிருக்கூட்ட
மரபினில்யான் ஒருவ னன்றோ
வகையறியே னிந்த
ஏழைபடும் பாடுனது திருவுளச் சம்மதமோ
இதுதகுமோ யிதுமுறையோ
இது தருமந்தானோ
மாழைமணிப் பொதுநடஞ் செய்வள்ளால் யானுனக்கு
மகனலனோ நீயெனக்கு வாய்த்த
தந்தையலையோ
கோழையுல குயிர்த்துயரம் இனி பொறுக்கமாட்டேன்
கொடுத்தருள் நின்னருளொளியைக்
கொடுத்தரு ளிப்பொழுதே.

[கீழ் விழுந்துபணிகிறான் லிங்கத்தினின்றும் ஈஸ்வரன் எழுந்து நந்தியைப் பார்த்து]

## ஈஸ்வரர் பாட்டு

பல்லவி

சற்றேவிலகியிரும்பிள்ளாய் சந்நிதானமறைக்குதாம் (சற்)

அநுபல்லவி

நற்றவம்புரியும் நம்மிடத்திரு
நாளைப்போவார் வந்தே இருக்கிறார் (சற்)

சரணம்

சாதிமுறமைபேசுறான் தன்னையிகழ்ந்துயேசுறான்
கோதிலாதகுண முடையோன்
கோபங்கொண்டால் தாளமாட்டோம் (சற்)

வேதகுலத்தைப் போற்றுறான்
விரும்பிவிரும்பியேற்றுறான் பூதலத்திலிவனைப்போலே
புண்யபுருஷ ஒருவனில்லை (சற்)

[நந்தி விலகுதல் நந்தனும் மற்ற
வரும் பணிதல்]

**பாட்டு**

அரஹரசிவசிவஅம்பல வாணா
தில்லையம்பலதேசிக நாதா
புரமூன்றெரித்தபொன்னம்பல வாணா
கரியுரிபோர்த்தகருணா கரனே
அனுதினமன்றுளாடிய பாதா
பிழைப்பொறுத்தாளும்புண்ணிய மூர்த்தி

(சீன் முடிவு)

---

**சீன்—6. இடம்—ஆதனூர்சேரி.**

**நடிகர்:—பாவாடை, தாண்டவராயன், தோப்புளான், படவேட்டான், பெரிய கிழவன், நந்தன்.**

பாவாடை. வ-ம்:—ஏண்டா எம்மவனே! தொப்புளான் இந்த எங்கூத்யாரு நந்தனோடே எய்வு குடுக்ரதுக்கு நம்மாலே முடியலே. இதுக்கென்னடா ஓசனே.

தாண்டவராயன் வ-ம்:—அட பசங்களா! இன்னிக்கி சர்யாவோசன செய்ங்கடா. இல்லாட்டா எம்மவனே எல்லாரும்சேர்ந்து கொண்ணுட்ளாம்.

தொப். வ-ம்:—அடடே! அதெல்லாம் கூடாது. நம்பசேரிக்கி நாட்டாமை கெய்வன் கிரானில்லே; அவனோடே செல்லி நந்தனுக்கு புத்தி செல்லனும்டா.

படவேட். வ-ம்:—டே எங்கூத்யாரே பாவாடே! சேரிலேபோயி நம்ப பெரிய கெழநாட்டாமை இப்பான் கூட்டியானுண்ணே.

[பாவாடை உள்ளேபோய் பெரிய
கிழவனை அழைத்து வருதல்]

பெரிய கிழ. வ-ம்:—ஏண்டா பசங்களா! இந்த கெயத்தை கவனிக்ர தில்லே. எம்மவங்களா! ரெண்டு கள்ளுதண்ணி கொடுக்ர தில்லே. எதுண்ணு எய்வு சமாசாரமானு கூப்டாது.

பாவா. வ-ம்:—கேளாண்டே! இண்ணு நம்மசேரியிலே நந்தன்கிரான் இல்லே. எம்மவன் செவாசெவா அராகரா இண்ணு காலங்கயிக் கிறுன். சேரியே பாயாபோச்சு; நாப்பதுவேலி பாப்பார ஆண்ட பூமி பாய் பண்ணிட்டான்; எம்மவனுக்கு எதுனு புத்தி கித்தி செல்லி சரிப்படுத்துணும்ணு.

தொப். வ-ம்:—நாட்டாமைக்கி தெரியாத யோசன என்னுடாகிது. அல்லாம் சரியா பூடுண்டா.

தாண்ட. வ-ம்:—டே எம்மவனே! நாட்டாம நந்தன சரிபடுத்திணிணு ஊரிலே சேத்துக்கவோம். இல்லாப்போனு எம்மவனே பாத் துக்கோ தாத்துக்கோலாலே தாக்கிடுவோம்.

பெ. கி. வ-ம்:—அதுக்கீட்டேட்டுண்டா. ஒரு கலயம் தண்ணிகொண் ணுந்தாதான் வெங்காரமுடியும் என்னுடா செல்ரீங்கோ

[பாவாடை உள்ளேபோய் ஒரு கல யம் கள்ளுகொண்டுவர கிழவன் குடித்துவிட்டு]

வ-ம்:—எம்மவனே பாவாடா நாம்போயி நந்தன சரிபடுத்திகொண் ணுந் துட்ரேண்டா.

தாண். வ-ம்:—போய்வாடா எங்கூத்யாரே.

[எல்லோரும்போதல்.]

(சீன் முடிவு.)

---

**சீன்—7. இடம்-சேரிக்கடுத்த வெளிப்புறம்.**

**நடிகர்:—நந்தன், பெரிய கிழவன்.**

நந். வ-ம்:—ஆ ஹா எனது சகோதரர்களாகிய என்னினத்தவருக்கு நான் எத்தனை நற்புத்தி கற்பித்தாலும் அவர்கள் சித்தம் போன போக்கில் பேசுகின்றார்கள்.

இத்துடன் நமது மிராசுதாரரின் குமஸ்தாகிட்டு வையரும் என் வேண்டுகோளைக் கவனியாது கழனி வேலையைக் கவனிக்கும் படிச் சொல்கிறார். எனக்கோ சதாசர்வதா காலமும் தில்லையம் பலப் பெருமான் பாதசேவை செய்யும் பக்தி பாவி வருகிறது. ஆம் அப்பகவானது தெரிசனமில்லாது இச்சென்ம விமோசன மாகாது. ஆகவே அந்த,

## நந்தன் பாட்டு

பல்லவி

கனகசபாபதிதெரிசனம் ஒருநாள்-கண்டால்கலிதீரும்

அநுபல்லவி

ஜனகமகாமுனி யோகியர்தேடிய
தினகரகோடிதே ஜோன்மயமாகிய (கன)

சரணம்

மனதிலொடுங்கிய கல்மிஷம்போக்கும்
மாயப்பிணியதனை மறுவடிவாக்கும்
ஜெனனமரணசமு சாரத்தை நீக்கும்
திருவடிநிழலிலே கூட்டியே காக்கும் (கன)

வ-ம்:—சர்வஜீவ தயாபரனுக விளங்கும் அப்பரம் பொருளின் அருளுக்குப் பாத்திரமாகும்வரை இச்சென்ம விமோசனமாவது கடினம். அப்பகவானை காணுமலிருக்கலாகாது.

[திடீரென பெரிய கிழவன் பிரவேசித்து]

பெரிய கிழவன். வ-ம்:—டேட்டே எம்மவனே நந்தா என்னுடாது எங்கூத்யாரே எத்தடா காணப்போறே.

நந். வ-ம்:—என்னை யாட்கொள்ளும் இறைவன் பாதத்தை.

பெரி. வ-ம்:—அத்தே காணும நீ சேரியிலே இக்க மாட்டியா. எங்கூத்யாரே இத்தெல்லாம் என்னுடா எப்பு மவனே.

## நந்தன் பாட்டு

ஆனந்தக்களிப்பு

காணுமலிருக்கலாகாது பாழுங்
கட்டைக்கடைத்தேற வேண்டியிருந்தால் (காணு)

பெரி. வ-ம்:—ஏண்டா நந்தா காணுமக்கிலாகாதுண்ணு செல்றியே அந்தக்காலு என்னுகாலுடா ஆட்டுக்காலா மாட்டுக்காலா

நந். வ-ம்:—அடே கிழவா ஆட்டுக்கால் மாட்டுக்காலென்று அதை நினைத்துக்கொண்டாய் மறுமுறை அப்படிச்சொல்லாதே. அப்பகவானுடைய பாதமானது சாமான்ய மானதல்ல.

பாட்டு (ஷ மெட்டு)

முத்தியளித்திடும் பாதம் - தில்லை
மூவாயிரவர்கள் பூசிக்கும் பாதம்
சத்திக்கிணையான பாதம் - வேத
சாஸ்திரங்கள்நாலுந்தேடிய பாதம் (காணு)



67891

காலனைச்சீறிய பாதம் - ஜன
காதிகளுக்குள்ளேவோதிய பாதம்
மாலயன்தேடிய பாதம் எங்கள்
மாணிக்கவாசகர் பீடிகை பாதம் (காணு)

பெரி. வ-ம்:—போதும் நிறுத்துடா எய்வுமவனே. சேரியிலேவந்து பொறந்தையடா. எங்ககொலத்தை கெடுக்க அந்த பாப்பார ஆண்ட சாப்பாடுல்லா வொன்ன இப்பிடிபண்ணுது.

ஏண்டா! என்னடாயிது அராகரா செவாசெவா இத்தெல்லாம் நம்ப ளுக் கொதுவுமாண்ணேன். ஆண்டைங்கோ அடிமை வேலபாயா போச்சு பறச்சேரி பசங்களே கெடுத்தூட்டே எங்கூத்யார் மவனே வுன்னலே எம்பேரு நாட்டாமதலப்பா எறங்கி போச் சடா. அடநந்தா நான் செல்றதக்கேளு.

## பெரியகிழவர் பாட்டு

இராகம்-சங்கராபரணம், தாளம்-ஆதி.

பல்லவி

ஞாயந்தானேநீர் சொல்லும்-ஓய். நந்தனரே
நம்மஜாதிக்கடுக்குமோ (ஞாய)

அநுபல்லவி

சேரியில்லாவழக்கம் நீர்
செய்துகொண்டுவந்தபழக்கம் இந்த
ஊரிலெங்குமதுமுழக்கம் வெகு
உறுதியாச்சுதுவொழுக்கம் (ஞாய)

சரணம்

சிதம்பரமென்கிறபேச்சு நாங்கள்
செய்திடுங்காரியம்போச்சு அது
மதம்பிடித்ததுபோலாச்சு இந்த
மண்டலப்பறையருக்கேச்சு (ஞாய)

பறையருக்கேதுதைப்பூசம் அதை
பார்க்கவேவுனக்குவிஸ்வாசம் சிறு
பயல்களுக்கேயுபதேசம் நீ
பண்ணிவைத்ததெல்லாம்மோசம் இது (ஞாய)

பெரி. கி. வ-ம்:—ஏண்டா நந்தம்பயலே இத்தெல்லாம் நமக்கெண் ணுத்துக்கிண்ணேன். எங்கூத்யாரே இத்தெல்லாம் இண்ணே டே உட்டுட்டு கயிணிவேலயபாத்து ஒயுங்காகீரியா என்னடா செல்றே. இந்த பாயும் பாப்பாரதெய்வங்க பறயங்களுக்கு சகாயம் பண்ணுதுடா. நம்ப இருசிகாட்டேறியயானருத்ரனே கும்பிட்டுண்டு கயிணிவேலயபாருடா.

நந். வ-ம்:—கிழவா வுன்வயதிற்கேற்ற புத்தி வுன்னிடமில்லையே. உலகத்தில் பறையனகப் பிறந்தாலென்ன. பாப்பானகப் பிறந்தாலென்ன ஜென்மமென்பது இருவருக்கும் ஒன்றுதானே இதுபோல் பறதெய்வம் பார்ப்பார தெய்வமென்பதுண்டா. பக்தியிலும் பறப்பக்தி பாப்பார பக்திஎன்பதுண்டா அடே கிழவா உனது பறப்புத்தியானது இன்னும் உன்னைவிட்டு நீங்கவில்லையே.

எங்கும் நிறைந்த சங்கரன் சகல ஜீவராசிகளையுங் காத்தளிக்குங் கடவுள் அடியார்க் கிரங்கும் அம்மையப்பன் பறையனென்றும் பார்ப்பானென்றும் பேதமெண்ணுவாரா. சமயகோடிகளெல்லாம் தந்தெய்வ மெந்தெய்வ மென்று சாதிக்கும் சர்வ வல்லமையுள்ள சர்வேஸ்வரன் பறையனுக்கோ ருருவம் பார்ப்பானுக்கோருருவமாக இருக்கின்றாரா.

அப்படி இருப்பதாகவாவது எந்த சாஸ்திர மேனுங் கூறுகின்றதா. பறையன் தெய்வத்தைப் பார்க்கப்படாது. பறையன் பக்தி செய்யக் கூடாது என்ற வழக்குண்டா. இதென்ன பேதமை. சேரிக்குப் பெரிய கிழவனென்றும் நாட்டாண்மைக் காரனென்றும் பெயர் வைத்துக் கொண்டாய். சிறுபிள்ளைகளைப்போலென்னிடம் பேசுகின்றாய் கிழவா வுனக்கு,

## நந்தன் பாட்டு

மீசை நரைத்துப் போச்சே கிழவா
ஆசை பெருக்க லாச்சோ கிழவா
பாசம் வருக லாச்சே கிழவா
பாவம் விலகிப் போச்சோ கிழவா
கூனுங் குறுகிப் போச்சே கிழவா
கோபம் விலகிப் போச்சோ கிழவா
அங்கம் தளர்ந்து போச்சே கிழவா
ஆங்காரமு மாச்சோ கிழவா
சேரியை நினைந்தாயே கிழவா
சிதம்பர மறந்தாயே கிழவா
மானிட ஜென்மமடா கிழவா
மாண்டால் வருகுமடா கிழவா
அம்பலத் தரசனடா கிழவா
ஆளுந் தெய்வமடா கிழவா
திருவடி நினையாயோ கிழவா
தேடித் தெளியாயோ கிழவா

வ-ம்:—நரை திரை மூப்பு மூடிக்கொண்டது கூன்வளைந்துவிட்டது வயது முதிர்ந்துவிட்டது 'வீடுபோவென்கிறது காடுவாவென்

கிறது' இந்த லக்ஷணத்தில் உலக ஆசைபிடித்து ஊதாரியைப் போல் உளறுகின்றாய் உனது பறப்பிறப்பின்பாவம் நீங்க சிதம் பரநாதனின் திவ்ய நாமத்தை ஜெபித்து அவனது தெரிசனம் பெறுதற்குப் போகலாம் வா.

பெரிய. வ ம்:—அடநந்தா என்னடாது எம்மவனே யென்னென்ன மோ செல்ற, அந்த பாவாட தொப்ளான் படவேட்டான் தாண்ட் ராயன் சென்னனே சரியாகீது எங்கூத்யாரே இத்தெல்லாம் வாணும் இந்தவொடம்பு பறச்சேரியிலே பெறந்தது அதுக்கு தக்னபடி நடந்துக்கிறதே நல்லாகீம். இந்த வொடம்பு வாடி வதங்குறதுக்கு முன்னலே ஆண்டைங்கோ வேலயே சேஞ்சி நாலுகாசி சேத்துக்கோடா.

நந்த. வ-ம்:—அடே! கிழவா மறுபடியும் என்னென்னமோ உளறு கின்றாய் இந்த தேகத்தைப் பெரிதாகப் பேசுகின்றாய். கிழவா

## நந்தன் பாட்டு

காயமே இது பொய்யடா சிவ
காத்தடைந்த பையடா
மாயனார் குயவன்செய்த
மண்ணுபாண்டம் வோடடா
உப்புமண்ணும் வோட்டைமூங்கில்
ஓட்டிவைத்தக் கூடடா
உளுத்தநரம்பும் வெளுத்ததோலும்
இழுத்துக்கட்டின வீடடா

வ-ம்:—என்னும் அநித்திய தேகத்திலாசைகொண்டு பிரபஞ்ச மாயா சக்தியில் ஈடுபட்டு "மாடுண்டு கன்றுண்டு மக்களுண்டு என்று மகிழ்வதெல்லாம் கேடுண்டு எனும்படிக் கேட்டுவிட்டோம் இனிக்கேள்மனமே ஓடுண்டுகந்தையுண்டு உள்ளே எழுத்தைந் தும் ஓதவுண்டு தோடுண்டகண்டன் அடியார் நமக்குத் துணையு முண்டே."

என்பது அறியாது வீண் வார்த்தைகளைப் பேசி என்னை மயக்கப் பார்க்கின்றாய். அடே கிழவா! இந்த ஜென்மமெடுத்ததின் பல னென்ன. இந்த ஜென்மம் யாரால் நமக்குக் கொடுக்கப்பட்டது. எதற்காக இந்த ஜென்மத்தை சிருஷ்டி செய்தார். இந்த ஜென்ம மெடுத்து அதனலடையும் மார்க்கத்தைச் சொல்கிறேன் கேள்.

## நந்தனார் விருத்தம்

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்
தீவண்ணர்திற மொருகால் பேசாராகில்
ஒருக்காலும் திருக்கோயில் சூழாராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணாராகில்

அருநோய்கள்கெட வெண்ணீ றணியா ராகில்
அலியற்றூர்பிறக்கும்வா றியாதோ வென்னில்
பெருநோய்கள் மிகப்பிடித்து பிறந்தும்செத்து
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றூரே.

வ-ம்:—கிழவா! மேலும் மேலும் பாவமூட்டையைக் கட்டிக்கொள்ளாதே. இப்பவோ, பின்னையோ, மாலையோ, காலையோ நீ இறக்கப் போகின்றாய். பாழான நரகக் குழியில் வீழாது மோக்ஷசாம்ராஜ்ய மடைய இதோ இந்த பஞ்சாக்ஷரத்தை வாயில் போட்டுக் கொண்டு என்னுடன் சிவநாம சங்கீர்த்தனம் செய்வாயாக.

[நந்தன் விபூதி எடுத்துப் பூசி கிழவன் வாயில் போட்டு]

## நாமாவளி

நந். அரஹரசிவசிவ அம்பலவாணு

கிழ. அரஹரசிவசிவ அம்பலவாணு

[கிழவனும், நந்தனும் நாமாவளி பாடிக் கூத்தாடுகின்றனர். மற்ற பறையர்கள் வந்து பார்த்து வயிற்றி லடித்துக்கொண்டு ஓடுகின்றனர்]

(சீன் முடிவு)

---

## சீன்—8. இடம்-சேரிக்கடுத்த வீதி.

**நடிகர்:—தோப்புளான், படவேட்டான், பாவாடை, தாண்டவராயன், வள்ளுவன்.**

தொப். வ-ம்:—வண்டாண்ணே படவேட்டான் எம்மவன் நாட்டாமை கெயமும் அந்த நந்தன் கூட கூடிக்கினு செவா செவா போடுதே என்னுடாயிது.

தாண். வ-ம்:—என்னமோ எங்கூத்தியாரு நம்ப சேரிக்கு அவமானம் செய்ய பொறந்திக்கான். எம்மவனே தொலச்சுட்டா தாண்டா நம்மசேரி சொகப்படும்.

பாவா. வ-ம்:—இல்லே இந்த பெரிய கெயம்கூட கூத்தாடுதையாண்ணு. பயஎன்னமோ மந்திரம் கிந்திரம் தெரிஞ்சுருப்பாண்டா.

பட. வ ம்:—அட பசங்களா நான் வொண்ணு சொல்றேன் கேளுங்க. அந்த நந்தனுக்கு என்னமோ காத்து கருப்பு சேஸ்டையாய்த் தானிருக்கும்

தொப். வ-ம்:—அட போடா காத்தாவது கீத்தாவது எங்கூத்தியாரு வேணும்ணே செவா செவாபோட்டு சேரியே பாயாக்குருன் இண்ணு.

பட. வ-ம்:—கேட்டுத் தொலங்கடா எதுக்கும் நம்ப வள்ளுவன் சாமியே கூட்டியாந்து செவ்டி போட்டு பாத்தா எல்லா சேதியும் நல்லா தெரிஞ்சுடும்.

தாண். வ-ம்:—அதும் வோசனேதாண்டா அடே அண்ணே தொப்ளான் நீபோயி அந்த வள்ளுவன் சாமியே கூட்டியாடா. எங்கூத்யாரு என்னு செல்ருன் கேக்கலாம்.

[தொப்புளான் உள்ளே சென்று வள்ளுவனுடன் வருகிருன்.]

பட. வ-ம்:—சாமி நமுஸ்காரம் செய்ரோங்கோ உட்காருங்கோ இப்படி.

[வள்ளுவன் உட்கார்ந்து]

வள். வ-ம்:—ஆமாம் என்ன விசேஷம் கூட்டம் பலமா யிருக்கிறது.

தொப். வ-ம்:—சேரியிலே நந்தன் கிரானே தெரியுமா?

வள். வ-ம்:—சரிதான் நந்தனைத் தெரியாதோ எனக்கு, மிராசு ஐயர் வீட்டு ஆள் தானே.

தாண். வ-ம்:—அந்த எங்கூத்தியாருதான். அவன் என்னு செய்ராண்ணு. சேரியிலேகிர எல்லாருக்கும் செவ செவாண்ணு மந்திரம் போட்ரான் கூத்தாட்ரான். எங்கூத்தியாரு ராவானுக்கா தூக்கமில்லாம கூச்சபோட்ரான். இந்தா திப்புங்கூருக்கு எங்களே இயித்தும் போனுன். செலம்பரம் போவுணும்ணுரான். அந்த எம்மவன் நாட்டாமகாரனுக்கும் செவாசெவா செல்லீட்டான். இது என்னுசாமி அவன் ராசியே பாத்து செல்லுங்க.

தொப். வ-ம்:—அந்த யேட்ட பாத்து சென்னுத்தான் சரியாக்கும்.

பட. வ-ம்:—மின்னுலே ராசிபாக்குடுண்டா யேட்ட பின்னுலே பாக்கலாம்.

வள். வ-ம்:—ஆமாம் நந்தன் பேர்ராசி பலனை முதலில் பார்த்து விட்டுத் தான் வேறு காரியத்தைப் பின்னுல் பார்க்க வேண்டும்.

பட. வ-ம்:—வள்ளுவன் சாமி! எல்லாஞ்செரியாப்பாத்துச் செல்லுங்க.

[வள்ளுவன் சுவடிகளைப் பிரித்து பார்த்துவிட்டு]

வள். வ-ம்:—இப்போது தற்சமயம் நந்தன் பேர்ராசிக்கு பலன் சரியாயில்லை சேரியிலே அஷ்டமச்சனி ஒன்பதாமிடத்து குருவுடன் ராகு கேது சம்பந்தம் ஆருமிடத்தில் சுக்கிரன் செவ்

வாய் ஒருவருக்கொருவர் உச்சம்பெற்று விட்டார்கள். 12-மிடத்து பாக்கியஸ்தானதிபதி 7-மிடத்து சந்திரனிடம் சண்டையிட்டு நிற்கிறார். மற்ற 1-2-3-4-5-ஆமிடத்து கிரகங்கள் சோங்கி நிற்கிறது. இதற்குபலன் என்னவென்றால் நந்தன் பயித்தியங் கொள்ளியைப்போல் பாட்டுபாடுவான் இரவுபகலில்லாமல் எங்கும் வோடுவான் அட்டகாசமாய் ஆடுவான் அடிப்பான் பிடிப்பான் கழனிவேலையை கவனிக்கமாட்டான் இவனை இப்படியே விட்டுவிட்டால் இந்த ஆதனூர் பறைச்சேரியை அழித்து விடுவான் அவ்வளவுதான் சமாச்சாரம்.

தொப். வ-ம்:—ஆமாஞ்சாமி எங்கூத்யாரு இப்படி சேஞ்சாண்ணு நாங்க பொயிக்ரது எப்படி எம்மவனே இண்ணேடே கொண்ணுபோட்டுட்டா சேரி சொகப்படும்ணு நெனக்கிறேன்.

வள். வ-ம்:—அதெல்லாம் கூடாது? இது மயானருத்ரனுடைய வேலை ஆகவே நீங்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து மயானருத்ரனுக்கு பொங்கலிட்டுப் பூசைபோட்டால் சேரிக்கும் க்ஷேமமடையும் நந்தனும் நல்ல சுகமாயிருப்பான்.

தொப். வ-ம்:—சர்தான்; இதுவும் வோசனதான். அட படவேட்டான் நம்ப வள்ளுவன்சாமியே கூட்டிக்ணுபோயி ரெண்டு கள்ளுதண்ணி வாங்கிக்குடுத்து வாடா.

[வள்ளுவன் படவேட்டான் போகின்றனர்]

தாண். வ-ம்:—எண்டா! வள்ளுவன்சாமி சென்னனே அந்த மயானருத்ரன் பூசைக்கு என்னடா செஞ்சிதொலக்றது. எம்மவனே பணம் வேணுமடா.

தொப். வ-ம்:—ஆமாண்டா தலைக்கு 1-பணம் வரிவைச்சா போதுண்டா சேரிக்கு சனியன் புடிச்சிருக்கான் இண்ணு எவண்டா வரி குடுக்கமாட்டான் வாங்கடா போயி வேலயேபாப்போம்.

[போகின்றனர்.]

(சீன் முடிவு.)

---

**சீன்—9.** **இடம்—சேரிக்கடுத்த சோலை.**

**நடிகர்:—படவேட்டான், தோப்புளான், தாண்டவராயன், பாவாடை, பறச்சியர், பறையர், நந்தன்.**

[கள்குடம், சாராயப்புட்டி, அவல் கடலை முதலிய பக்ஷணங்களுடன் கெரகம் வைத்து பம்பை உடுக்கை தப்பட்டை யடித்து வேண்டுகிறார்கள்.]

## பறையர்கள் பாட்டு

வீரன் இருளன் காட்டேறி
    வெறியன் நொண்டி சாமுண்டி
தூறித்தூண்டி நல்லண்ணன்
    தொட்டியச்சின்னன் பெத்தண்ணன்
மாறுமுனியன் சங்கிலியும்
    மாடன்கறுப்பன் பாவாடை
மூரிக்காத்தான் குழியிரிசி
    மோகினி சப்தகன்னியரும்
சேரிமன்னரான் மின்னடியன்
    சிறுகாட்டுடையான் பனைமரத்தான்
மாரியாண்டி வழிமறித்தான்
    மலையன்சாத்தான் பக்கிரியும்
எரியனும்சிலம்பாயி இடையன்
    ஈனன்நல்லான் ஊமையொடு
வீறுங்கள்ளன் பெத்தாச்சி
    வீட்டுதெய்வங்களனைவருக்கும்
பூசைகள்போட்டோம் கொள்வீரே
    புள்ளைகளைபாது காப்பீரே

படவே. வ-ம்:—எண்டா தாண்ட்ராயா! இப்படி எல்லாம் படிச்சா சன்னதம் வருமாடா எங்கூத்யாருங்களா நம்பஜாதி வயிக்கப்படி ஆடிப்பாட்ணு தாண்டா சன்னதம்வரும்.

தொப். வ-ம்:—ஆமாண்டா அத்தாண்டா சரி; அடியே பொண்டுங் களா வாங்கடி.

[பறையரும் பறச்சிகளும் கைகோர்த் துக்கொண்டு ஆடுதல்]

### பாட்டு

### (தெற்குமுகமாயிருக்கும் என்ற மெட்டு)

தேவாதிதேவர்களேதேடிவாருங்கோ — எங்க
சேரிதனைக்காவல்செய்ய ஓடிவாருங்கோ

மூவாதிமூவர்களே முன்னேவாருங்கோ — எங்க
மொண்டிமுனியாண்டிகளே பின்னேவாருங்கோ

பாவாடைகாட்டேறி பத்திரகாளி — எங்க
பக்கமிருந்தாண்டிடுவாய் ருத்திரகாளி

வாவாடிமோகினியே மொண்டிமுனியே — எங்க
வஞ்சியபரஞ்சிபுகழ் ஜண்டிமுனியே

[உடன் ஒருவன்மீது ஆவேசம்வந் தாடுகிறான்]

தொப். வ-ம்:—சாமி இந்தப் புள்ளமேலே வந்திருப்பது யாருங்கோ?

சன். வ-ம்:—நான்தாண்டா மயானருத்ரன் அடே ரெண்டுமூணு வருசமா நீங்க என்னை நினைக்கவில்லை எனக்கு பலி கொடுக்க வில்லை. அதனால்தான் நான் நந்தன்மீது வந்திருக்கிறேன்.

தொப். வ-ம்:—இனிமேல் வர்சாவர்சம் தவறாம வரிவைச்சி பூசை போடுவோம் சாமி அந்த நந்தம்பையனை காப்பாத்தணும் எங்க சேரிக்கு சேமங்கொடுக்கணும்.

சன். வ-ம்:—ஆகட்டுமடா அதோ வருகிறான் நந்தன் நானும் போயி வருகிறேன்.

[சன்னதமாடியவன் கீழ்விழுகிறான்]

பட. வ-ம்:—எங்கூத்தியாரு நந்தன் வர்ராணு பாருங்கடா. இந்த சாமி சென்னாப்போல இனிமே எம்மவனுக்கு மயக்கம் தெளிஞ் சுடுண்டா. [நந்தன் வருதல்]

## பாட்டு தர்க்கம்

இராகம்-நீலாம்புரி.

| | | |
|---|---|---|
| நந்தன் | சிவனேதெய்வம் சிதம்பரமேகயிலாயம்<br>தவமேபெருமை தான்சம்பிரதாயம் | (சிவ) |
| தொப். | சேரியேசொர்க்கம் ஏரியேகயிலாயம்<br>மாரியேதெய்வம் மதசம்பிரதாயம் | (சேரி) |
| நந்தன். | படிப்பதுஞானம் பார்ப்பதுமூலம்<br>குடிப்பதுமதிப்பால் குலசம்பிரதாயம் | (சிவ) |
| பட. | பிடிப்பதுநண்டு புசிப்பதுஇறைச்சி<br>குடிப்பதுகள்ளு குலசம்பிரதாயம் | (படி) |
| நந்தன். | பாழைக்கடப்பார் பரவெளிதாண்டி<br>கோழையறுப்பார் குலசம்பிரதாயம் | (சிவ) |
| பாவா. | ஆழத்தில்குளிப்போம் அருங்கோடைவந்தால்<br>கூழைக்குடிப்போம் குலசம்பிரதாயம் | (ஆ) |
| நந்தன். | ஆசையைப்போக்கி ஐம்புலனைச்சுட்டு<br>மாசற்றவாழ்வு மதசம்பிரதாயம் | (ஆ) |
| தாண். | கையிலேகலயம் காலிலேசேறு<br>பையிலேபாக்கு பறசம்பிரதாயம் | (கை) |

நந். வ-ம்:—ஏ படையர்களா! நீங்களென்ன மானிட ஜென்மந்தானா? அல்லது, மிருக இனத்தைச் சேர்ந்தவர்களா? இதென்ன நியாயம் உங்களது அநியாய நடத்தையைக் கண்டல்லவா உலகத்தார் இவ்விதம் உங்களை அருகில் வரக்கூடாதென்றும் அருவருக்கின்றனர்.

பஞ்சமாபாதக கிருத்தியங்களைச் செய்துதானா பகவானைப் பணிய வேண்டும். பரமதோஷிகளே! கள்ளைக்கடித்துக் கள்ளைக் குடிப்பதும், ஊனை வளர்க்க ஊனைத் தின்பதும் கூடா ஒழுக்க மென்பதை யறியீர்களா?

எந்த சாஸ்திரம் அல்லது எந்த தெய்வம் உங்களை இந்தவிதம் செய்யும்படிச் சொல்லியது. கொடும்பாவிகளே! பகவானது பாதத்திற் காளாகும் பாக்கியம் பெறாது இத் தீச்செயல் புரியும் உங்களெதிரில் நிற்பதும் தகாது. உங்களை இலகுவில் விடவும் படாது. [கட்குடங்களையும் மாமிசபக்ஷணாதிகளையும் எடுத்தெறிந்து எல்லாரையும் அடித்துத் துரத்துகிறான். சகலரும் பயந்தோடுகின்றனர்]

(சீன் முடிவு.)

---

## சீன்—10. இடம்—மிராசுதார் ஐயர் வீடு.

**நடிகர்:—மிராசுதாரர், ஷை மனைவி கிருஷ்ணம்மா, கிட்டுவையர், தோப்புளான், படவேட்டான், தாண்டவராயன், பாவாடை, நந்தன்.**

மிரா. வ-ம்—கிட்டுவந்தானோ?

கிரு. வ-ம்:—இல்லை

மிரா. வ-ம்:—ஆனா இன்னிக்கி சோமாசு யார் செய்தது.

கிரு. வ-ம்:—நீங்கள் சொல்லுங்க பார்ப்போம்.

மிரா. வ-ம்:—நீயா செய்தே.

கிரு. வ-ம்:—நன்னாயிருந்ததா.

மிரா. வ-ம்:—நன்னா யிருக்கவேதான் கேட்டது; நீ செய்ததா?

கிரு. வ-ம்:—ஆமாம்.

மிரா. வ-ம்:—நீ எப்போ கத்திண்டே.

கிரு. வ-ம்:—கிட்டு பண்றபோது பாத்திண்டிருந்தேன்.

மிரா. வ-ம்:—ஆனா இத்தனைநாள் ஏன் பண்ணலே.

கிரு. வ-ம்:—நன்னாயிருக்குமோ யிராதோ இன்னு இத்தனைநா பயமாயிருந்தது. போனப்போறது பார்ப்போமிண்ணு இண்ணிக்கி பண்ணேன். நிஜமா நன்னா இருக்கா. இல்லே பரியாசம் பண்றேளா.

மிரா. வ-ம்:—நிச்சயமா நன்னாயிருக்கு நாளைக்குக்கூடச் செய்.

கிரு. வ-ம்:—சரிதான்; இன்னிக்கி இத்த செய்ரத்துக்கு எவ்வளவோ கஷ்டமாச்சு.

மிரா. வ-ம்:—ஏன்.

கிரு. வ-ம்:—அக்காவுக்கு இஷ்டமில்லே.

மிரா. வ-ம்:—ஏதுக்கு.

கிரு. வ-ம்:—நெய், ரவா எல்லாம் செலவாறதாம்; இன்னம் என்னென்னமோ சொல்ரு

மிரா. வ-ம்:—இன்னும் என்ன?

கிரு. வ-ம்:—தூபர் திண்டிதனமாம்; சம்சாரம் பாழாப் போறதாம். தின்னு தின்னு வீட்டை தொடச்சிடுரூமாம்.

மிரா. வ-ம்:—அவா மாமியாராத்து வழக்கம்போல் பேசுரா.

கிரு. வ-ம்:—அதிருக்கட்டும் எத்தனை நாளா சொல்லிண்டிருக்கைகள் சீமைக்கமல அட்டிகே வாங்கித்தரேனின்னு.

மிரா. வ-ம்:—நீ கேக்ரதெல்லாம் இந்த ரெண்டொருமாசமாத்தானே இந்த அறுவடையாகட்டும் வாங்கித்தாரேன்.

கிரு. வ-ம்:—அதுக்கென்னு! இப்போ வாங்கிண்டா மாசூல் ஆனவுடனே பணங்கொடுத்தா போச்சு.

மிரா. வ-ம்:—நீ கெட்டிக்காரி சமயம்பார்த்து பிரஸ்தாபிக்கரே.

[கிட்டையர் வெளிவந்து வணங்கி.]

கிட். வ-ம்:—நமது பண்ணைக்காரன்கள் தங்களைக்காண வந்திருக்கா.

மிரா. வ-ம்:—(கிருஷ்ணம்மாளை பார்த்து) நீ உள்ளேபோ பிறகு பேசலாம் அடே கிட்டு அவாளை வரச்சொல்.

[கிட்டையர் உள்ளேபோய் பறையர்களை அழைத்து வருகிருன்]

பறை. வ-ம்—சுவாமி! நமஸ்காரம்.

மிரா. வ-ம்:—என்னடா விசேஷம் எல்லோரும் ஏககாலத்தில் வந்திருக்கிறீர்கள்.

## பறையர்கள் பாட்டு

(நோண்டிச்சிந்து)

ஐயேஒரு சேதிகேளும் உங்கள்
அடிமைக்காரப்பறையன் நடத்தைஎல்லாம்
வரவரக் கெட்டுப்போச்சு சேரியில்
வழக்கமில்லாதபடி பழக்கமிட்டான்

குடியிருக்க மாட்டோம் எப்போதுங்
கூக்குறல்போடுகிறு னுக்கமறந்தே
இருப்பா னொருவேளை கொள்ளாத
ஏக்கமடைந்தவன்போல் நாக்கைவளைத்துச்
சிரிப்பா னொருவேளை தில்லைச்
சிதம்பரமென்றுசொல்லி மதம்பிடித்தே
அழைப்பா னொருவேளை எங்களையும்
அண்ணன்வாவென்றுசொல்லி கிண்ணாரங்கொட்டி
குதிப்பா னொருவேளை திக்குமுக்கல்
கொண்டவன்போ லெதையோ கண்டவன்போல்
களிப்பா னொருவேளை மரம்போலே
கையசைக்கல்காலசைக்கல் மெய்யசைக்கலும்
இருக்கா தொருவேளை தாளம்போட்
டெக்களிக்கொட்டியே குடிசிக்குட்புகுந்து
பேசா னொருவேளை கண்டதெல்லாம்
பிரட்டென்றுசொல்லுவான் முரட்டுத்தனம்
மன்னரு சாமிபோலே கிளம்பி
வாய்விட்டா லருங்குரலூரெட்டுமே
ஐயோ சிவனேஎன்பான் கீழேவிழுந்
தழுவான் யாரையுந்தொழுவானே
கோவிலிற் போவோமென்பான் எங்களையுங்
கும்பிடச்சொல்லி யில்லாவம்புபண்ணுவான்
சுற்றிவரச் சொல்லியடிப்பான் சிவன்பேரைச்
சொல்லடாசந்நதியில் நில்லடாஎன்பான்
சொல்லித் தொலைக்கவேணும் இல்லாவிட்டால்
சுக்குமாந்தடிகொண்டு நொக்கிவிடுவான்
கொம்பேறி மூக்கன்போலே முதுகினில்
குத்துவான்புலிபோலத் தத்துவானே
இதுவென்ன காரணமோ எங்களுக்கு
ஈனமாயிருக்குது மானமல்லவோ
கறுப்பண்ண சாமிதானோ இருளன்
காட்டேறிவீரனிவன் வீட்டேறியோ
பாவாடை துரைதானோ ரண
பத்திரகாளியோ வுன்மத்தவீரனோ
பூசைகள் போட்டுபார்த்தோம் ஒன்றிலும்
போவதில்லைகாரிய மாவதில்லையே எங்கள்
வள்ளுவனுரைக்கேட்டோம் அவர்
எடுத்துசொன்னாரிதை விடுத்துச்சொன்னார்
மயான உருத்திரனார் பிடித்து
வாட்டுதடாஇப்படி யாட்டுதென்றார்

தெளியா தென்றுசொன்னர் இந்த
சேதியைச்சொல்லவந்தோம் நீதியுடனே
ஐயேஒரு சேதிகேளும்

மிராசு. வ-ம்:—அப்படியா சமாச்சாரம்; படுவா பயலுக்கு அவ்வளவு கெருவமாய் விட்டதா. அடே கிட்டு! நோக்கு தெரியுமாடா இதெல்லாம்.

கிட்டு. வ-ம்:—ஆணப்படியா எனக்கொண்ணுந் தெரியாதுங்கோ.

மிராசு. வ-ம்:—தெரியாது தெரியாதுண்ணு அவன் வரச்சேல்லாம் சாதம்போட் டனுப்பிரயாண்ணேன்.

கிட்டு. வ-ம்:—பண்ணையாள் வந்தா வழக்கம்போல் என்வேலையைச் செய்துவிடுகிறேன். வேண்டாமிண்ணு நிறுத்துட்ரேன்.

மிராசு. வ-ம்:—நல்லது அவனையும் உன்னையும் என்னபாடு படுத்துகிறேன் பார். அடே பயல்களா! அந்த படுவா மகன்,

## மிராசுதார் விருத்தம்

காலமேவந்தானிங்கே கள்ளக்கும்பிடுகள் போட்டுப்
பாலனைப்போலேபேசி பசப்பினன் போடாயென்றேன்
வேலைசூழுலகிலிந்த வீணனைப்போலே காணேன்
சீலமாஞ்சிதம்பரத்தைச் சேரவே விடைகொடேனே.

வ-ம்:—இன்று காலையில்தான் இங்குவந்து வயக்காட்டு விஷயங்களைப் பேசிப்போனன். நல்லது இத்தனை விவேகசாலியாய்விட்டானு அவன் வரட்டும் நீங்கள்போய் உங்கள் வேலையைப் பாருங்கள். நான் அவனை அடக்கி வைக்கிறேன்.

[பறையர்கள் போகின்றனர். நந்தன் மெல்ல வருகிறுன்]

## நந்தனர் பாட்டு

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஆதி.

பல்லவி

சிதம்பரம் போகாம விருப்பேனே-எந்தன்
ஜென்மத்தை வீணுகக் கழிப்பேனே (சிதம்)

அநுபல்லவி

சுதந்தரமெனக்கது தோன்றியதிங்கே
தூலமிங்கே எந்தன் சீலமுமங்கே (சிதம்)

சரணம்

பக்தியும் மனமும் பரவியதங்கே
சத்தியம்தானிந்த சடலமுமிங்கே (சிதம்)

[நந்தனர் மிராசுதாரரைக் கண்டு பணிதல்]

நங்.வ-ம்:—சுவாமி! நமஸ்காரம்.

மிராசு. வ-ம்:—அறிவுகெட்டமடையா! நமஸ்காரம் ஒருகேடா. உச்சி வேளையில் உள்ளங்கா லெரிய ஓடிவந்த வேலை என்னடா. கள்ளக் கும்பிடுங் காமாட்டி.

நங். வ-ம்:—சுவாமி! ஏழையைக் கோவிக்கலாகாது. அடியேன் வார்த்தையை அங்கீகரிக்க வேண்டும்.

மிரா. வ-ம்:—ஆமாம்; என்னடா வுன் மம்மதை; பறச்சேரியை பாழாக்கிவிடுவாய்போல் தெரிகிறது. பண்ணையாள்களை அடிப்பதும் பிடிப்பதும் ஆடுவதும் பாடுவதும் என்ன திமிர்தண்டமடா.

நங். வ-ம்:—சுவாமி! இந்த அடிமை வேலைக்காரன் அவ்வித அட்டூழியஞ் செய்யமாட்டான். மகா பாதகர்களாகிய அவர்களுக்குச் சாதகமே செய்திருப்பான்.

மிரா. வ-ம்:—ஓஹோ! அவர்கள் பாதகர்கள். நீ காதகனோ! போகட்டும் வந்த வேலை என்ன?

## நந்தன் பாட்டு ஆனந்தக்களிப்பு

பல்லவி

உத்தாரந்தாருமையே-எனக்
கொருவருமில்லை பரகெதியடைய (உத்)

அநுபல்லவி

வித்தைகள்கற்றதுமில்லை-யாரொரு
பக்தியிலேசென்று பரகதியடைய (உத்)

சரணம்

குற்றங்களெத்தனைக் கொடியேன் செய்தேன்
அத்தனையும்பொறுத் தாதரவாக (உத்)

மிரா. வ-ம்:—என்னடா வார்த்தையைவளர்த்திப் பசப்புகிறாய். எதற்காக உத்திரவுவேண்டும். வயலுக்குவேண்டிய எருவுவாங்க உத்திரவுவேண்டுமா? அல்லது பண்ணையாள் கூலியை குமஸ்தாவிடம் வாங்கிக்கொடுக்க வுத்திரவுவேண்டுமா? விவரமாகச் சொல்லடா.

## நந்தன் பாட்டு

இராகம்-உசேனி, தாளம்-ரூபகம்.

தில்லையம்பலத்தலமொன் றிருக்குதாம்-அதைக்கண்டபேர்க்கு
ஜெனனமரணபிணியைக் கருக்குதாம் (தில்)

மிரா. வ-ம்:—அடேநந்தா அம்பலமிருப்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம்தான். ஆயினும் அம்பலத்தின்மீது அவ்வளவு பக்தி கொண்டிருக்கும் உனக்கு அங்கிருக்கும் அதிசயங்கள் தெரியுமா? தெரிந்தால் சொல் பார்ப்போம்.

நந்தன் பாட்டு (ஷை மெட்டு)

உயரஞ்சிகரக்கும்பம் தெரியுதாம்-அதைப்பார்த்தபேர்க்கு
உள்ளங்குளிரக்கருணை புரியுதாம் (உ)

மிரா. வ-ம்:—எண்டா! கோவிலென்றிருந்தால் கோபுரமிருக்கும். அதற்குமேல் கும்பஸ்தாபன மிருக்குமென்பது சகலருக்கும் தெரிந்ததுதானே அதைவிட்டு வேறு விசேடமிருந்தால் சொல்லடா கேட்போம்.

நந்தன் பாட்டு (ஷை மெட்டு)

பண்ணவராயன்மாலுந் தேடும்மாம்-திருத்தில்லைக்காட்டில்
பாம்பும்புலியும்நடன மாடுமாம் (பண்ண)

மிரா. வ-ம்:—ஆமாம் சிதம்பர ஸ்தலமகிமையை யாராகிலும் சொல்லக் கேட்டிருப்பா என்றெண்ணுகிறேன். போகட்டும் சிதம்பர க்ஷேத்திரத்துக்கும் உனக்கும் வந்த தொந்தார்த்தமென்னடா பயலே.

நந்தன் பாட்டு (ஷை மெட்டு)

போய்வருகவுத்தாரந் தாருமே-வும்பொன்னடிக்கு
போற்றிசெய்தேன்கண்ணால் பாருமே (போ)

மிரா. வ-ம்:—ஆ! அப்படியா சமாச்சாரம் சிதம்பரத்திற்குப் போகப் போகின்றாயோ. அட பறப்பயலே என்னசொன்னாய். சிறிதேனும் அச்சம் பயமில்லாமல் எஜமானன் அதிலும் பிராமணன் என்ற மதிப்பில்லாமல்,

## பாட்டு

பல்லவி

பறையாநீசிதம்பரமென்றுசொல்லப்
படுமோடாபோகப் படுமோடா (பறை)

அநுபல்லவி

அறியாத்தனமிதைசொன்னாலினிமேல்
அடிப்பேன்கூலியைப்பிடிப்பேன்பாவிப் (பறை)

சரணம்

சிதம்பரமென்பதை விடு-கொல்லைச்
சேரடியிலேவந்து படு-நாத்தைப்

பதத்தில்பிடுங்கியே நடு-கறுப்
பண்ணனுக்கேபலிகொடு (பறை)

மிரா. வ-ம்:—கேவலமாகிய பறையர் குலத்துதித்த உனக்கு சிதம்பர தெரிசனம் ஒருகேடா தில்லை நடராஜமூர்த்தியின் பாத சேவைக்குப் பாத்திரமானவனே நீ.

## விருத்தம்

ஓதியடிவீராவென்றும் உக்கிரமாடாவென்றும்
பதிபெறுங்கறுப்பாவென்றும் பாவாடைராயாவென்றும்
துதிபெறுமிருளாவென்றுந் தொட்டியச்சின்னனென்றும்
மதுவொடுபிசிதம்வைத்து வருந்தியேவணங்குவாயே.

வ-ம்:—ஓதியடிவீரன் உக்கிரமாடன் பதிபெறுங்கறுப்பன் பாவாடைராயன் துதிபெறுமிருளன் தொட்டியச்சின்னனென்னும் தெய்வங்களுக்கு மதுமாமிசம் வைத்துப் படைத்துப் பக்திசெலுத்திப் பண்ணைவேலையைக் கவனித்துவாடா.

நந். வ-ம்:—சுவாமி! தெய்வம் என்பது பலவித பெயர் கொண்டதாக இருந்தாலும் எங்கும் பரவி எல்லாருக்கும் இன்ப முதவி ஏகப் பரப்பிரம்மமா யிருப்பது ஒன்றுதானே.

ஓதியடிவீரன் பாவாடைராயன் முதலிய பக்தமூர்த்திகள் வேறாயின் அவைகளுக்கு தெய்வமென்னும் சொல் ஏற்படக் காரண மில்லையே.

இதுநிற்க, பறையன் சிதம்பர தெரிசனம் செய்யப்படாதா. சிதம்பரம் என்னும் புலியூர் தெரிசனத்துக் கென்றே பூலோகத்தில் உதித்தவர்கள் வேதியர்கள் என்னும் வேதமுண்டா. மென்மேலும் தங்களிடம் பெருக்கிப் பேசுவதில் பலனில்லை. தயவு செய்து சிதம்பரம் சென்றுவர உத்திரவு கொடுக்க வேண்டும்.

மிரா. வ-ம்:—என்ன சொன்னய். அநிச்சகுலப் பதரே படுவாப் பயலே இழிகுலத்தினனுகிய நீயா எனக்கு புத்திபோதிப்பவன். பிரஷ்டா நீடித்த நாளாக என் பண்ணையில் வேலைசெய்து வருகிறு யென்று இன்று நீ பேசிய பிழையைப் பொறுத்தேன். நில்லாதே என்னெதிர் விலகிச் செல்லடா.

[அடிக்க எத்தனிக்கின்றார்
நந்தன் மறைகிறான்]

(சீன் முடிவு.)

சீன்—11. இடம்—அக்ராரவீதி.

நடிகர்:—கிட்டுஜயர், நந்தன்.

நந்தன் பாட்டு

இராகம்-சங்கராபரணம், தாளம்-ரூபகம்.

நாளைப்போகாம விருப்பேனே இந்த
நாற்றநரம்புமின்னஞ் சுமப்பேனே

[கிட்டுவையர் எதிர் வந்து]

கிட்டு. வ-ம்—அடே நந்தா! நாளை எங்கே போகப்போகின்ருய். சொல்லித் தொலையடா சோம்பேறிப் பயலே.

நந்தன் பாட்டு (ஷை மெட்டு)

நாளைப்போகாம விருப்பேனே இந்த
நாறுமுடலைக்கண்டு களிப்பேனே

கிட்டு. வ-ம்:—என்னடா நந்தா! என்னென்னமோ உளறுகின்ருய் வயக்காட்டுவேலையைக் கவனிக்க நாளைக்குப்போக நாள் பார்த்திருக்கின்ருயோ?

நந்தன் பாட்டு (ஷை மெட்டு)

நாளைப்போகாம விருப்பேனே இந்த
நாளைவீணுகக் கழிப்பேனே

கிட்டு. வ-ம்:—அடே! வீண் வார்த்தை பேசாமல் விஷயத்தைச் சொல்லடா எந்தவேலைக்காக நாளை போகப் போகின்ருய்.

நந்தன் பாட்டு (ஷை மெட்டு)

நாளைப்போகாம விருப்பேனே தில்லை
நாதனைக்காணுமல் புசிப்பேனே

கிட்டு. வ-ம்:—ஒஹோ! தில்லையைக்காணுமல் தின்னவுமாட்டாயோ ஆமாமடா கிட்டுப் பாப்பான் கைச்சமையலல்லவா உனக்கு மென்மேலும் ஞானம் முத்தி பத்தி பழுத்து விழுகிறது அடே நந்தா இந்த விதண்டாவாதமெல்லாம் வேண்டாம் உனது நன்மையைக் கோரி நான் சொல்வதைக் கவனி.

நந்த. வ-ம்:—சுவாமி நமஸ்காரம்; தாங்கள் சொல்வதிருக்கட்டும் என் வார்த்தையை முன்னம் கவனியுங்கள்.

கிட்டு. வ-ம்:—ஆகட்டும். சொல்லித் தொலையடா.

## நந்தன் பாட்டு

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஆதி.

சிதம்பரதெரிசனங் காணவிடிவிந்த
ஜென்மசாபல்ய மாமோ
ஜெனனமரணசமு சாரம்பெருகவே
செய்தவினைகள் போமோ (சிதம்)

கண்ணுங்கருத்திருக்க சிவனைக்காணமல்
காலங்கழிக்க லாமோ
காலபாசம்நம தருகில்வராமல்
கண்டுபயந்து போமோ (சிதம்)

இப்படிஎப்போது மிருப்போமென்று
எண்ணியிருக்க லாமோ
இருதயமறிந்திட செய்திடுங்கன்மங்கள்
இகழ்ந்துபிரிந்து போமோ (சிதம்)

கிட். வ-ம்:—மறுபடியும் பழைய கதையை ஆரம்பித்தாயா? அடே நந்தா! வெகுநாளாய் உன் தலைமுறை தத்துவமாய் மிராசுதாரர் வீட்டில் உன் குடும்பஸ்தாள் வேலைசெய்து நல்ல பெயர்பெற்று சென்றிருக்கின்றனர். அதை எல்லாம் அடியோடு தொலைக்க நீ எங்கடா இருந்துவந்தாய்.

நந். வ-ம்:—சுவாமி! நான் என்னசெய்வேன் என் முன்னோர்கள் செய்த வினைப்பயனே இவ்விதம் முடிந்தது.

கிட். வ-ம்:—சரிதான்; எவ்விதமும் தொலைந்துபோடா! ஆத்தையர் வயலுக்கு வருவார்; அவர் வரும்சமயம் அங்கிருந்து அவரைப் பணிந்து உத்திரவு பெற்றுக்கொண்டு உன் இஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்.

நந். வ-ம்:—அவ்விதமே செய்கிறேன்; விடைதரவேண்டும்.

கிட். வ-ம்:—தொலைந்துபோடா. போ! [இருவரும் போதல்]

(சீன் முடிவு)

---

**சீன்—12. இடம்—வயக்காடு.**

**நடிகர்:—நந்தன், மிராஸ்தார், பறையர்கள்.**

[நந்தன் ஒருபக்கம் உட்கார்ந்து நிஷ்டையிலிருக்கிறான். பறையர்கள் வயலில் வேலை செய்கின்றனர். மிராஸ்தாரர் வந்து நந்தனைக் கண்டு கைப்பிரம்பால் நந்தன் முதுகில் தட்ட நந்தன் எழுந்து பணிந்து நிற்க]

மிரா. வ-ம்:—அடே நந்தா! உன்போன்ற பறையர்களெல்லாம் அவரவர்கள் வேலையைச் செய்துகொண்டிருக்க, நீ மகா சிவபக்தனைப்போல் நிஷ்டையிலிருக்கும் பாவனைகாட்டி அமர்ந்திருக்கின்றாயே. என்னடா உனது மம்மதை.

நந். வ-ம்:—தாங்கள் சொல்லியபடி நான் மம்மதையாகவும் மர்யாதைக் குறைவாகவும் ஒரு காரியத்தைச் செய்ய வில்லையே.

மிரா. வ-ம்:—சரிதான் மகா பெரிய மேதாவிபோல் வார்த்தை யாடுகின்றாய். என்னடா உனக்கு நீயே பெரியவனாகிவிட்டாயோ.

நந். வ-ம்:—நானும் பெரியவனல்ல. தாங்களும் பெரியவரல்ல. அதோ வேலை செய்யும் பறையர்களும் பெரியவரல்ல.

மிரா. வ-ம்:—அப்படியா? வேறு யாரடா உலகில் பெரியவர்கள்.

## நந்தன் பாட்டு

இராகம்-எதுகுலகாம்போதி, தாளம்-ரூபகம்.

பல்லவி

ஆருக்குப்பொன்னம்பலக் கிருபையிருக்குதோ
அவனே பெரியவனாவான்

அநுபல்லவி

பாருக்குள் வீடுகள் மாடுகளாடுகள்
பணமிருந்தா லவன் பெரியவ னாவானோ

சரணம்

வேதபுராணங்க ளோதினதாலென்ன
வேதவேதாந்தங்கள் பேசினும்பலனென்ன
மாதவமேசெய்யும் மகபதியாலென்ன
மானிலந்தனைக்காக்கும் மன்னனாலென்ன (ஆ)

வ-ம்:—சுவாமி! யாராயிருந்தாலென்ன திருச்சிற்றம்பல நாதன் திருவடிக் கடிமை பெற்ற பாக்கியவானெவனோ அவனே பெரியவனென்ப துண்மை.

மிரா. வ-ம்:—அடடா! என்ன வேதாந்தமடா! அறிவற்ற மடையா. சிதம்பரமென்ற பதத்தை உன் வாயில் உச்சரிக்கவுங் கூடுமோ விலகிச் சென்று வேலையை கவனியடா.

நந். வ-ம்:—சுவாமி! தங்களுக் கடிமையாகி தங்கள் வேலையைச் சதா சர்வதா காலமும் செய்து கொண்டிருந்தால் என்னை யடிமை கொண்ட எம்பெருமானது தெரிசனம் பார்ப்ப தெப்போ. இந்த ஜென்ம சாபல்ய மாவதெப்போ.

மிரா. வ-ம்:—நந்தா! உனக்கென்ன பித்தம் பிடித்து விட்டதா? அல்லது சித்தப் பிரம்மையா? அல்லது வேறெதாவது வியாதியின் கூற்றா? அப்படியானல் உண்மையைச் சொல்லடா? தக்க வைத்தியனைக் கொண்டு மருந்தளித்து சிகிச்சை செய்யச் சொல்கிறேன்.

நந். வ-ம்:—சுவாமி! தாங்கள் கூறியபடி எனக்கு பித்தம் பிடித்திருப்பது உண்மைதான். ஆயினும் என் பித்தத்துக்கு மருந்து இங்குள்ள வைத்தியரிட மில்லை. இவ்வூர் வைத்தியரிடம் மருந்து சாப்பிட்டாலும் பித்தசாந்தி யாகாது.

மிரா. வ-ம்:—அப்படியா? உனக்கேற்ற வைத்தியன் எங்கிருக்கான்? அல்லது உனக்குத் தகுதியான மருந்து வேறு யாரிடமிருக்கிறது? சொல்லித் தொலையடா வாங்கித் தருகிறேன்.

## நந்தனர் பாட்டு

பித்தந்தெளிய மருந்தொன்றிருக்குது
பேரின்ப மன்றுள்ளே
மற்றமருந்துகள் தின்றுலுமுள்ளுக்கு
வல்லே வல்லே வல்லே ஐயே அடிமைப் (பித)

வ-ம்:—சுவாமி! அம்மருந்து சாமானிய மானதன்று இவ்வுலகில் அதற்கிணையான வேறுமருந்துகள் கிடையாது. அன்றியும்,

(பாட்டு ஷை மெட்டு)

பாம்பும்புலியுமெய்ப் பாடுபட்டுத்தேடிப்
பார்த்துப் பயிரிட்டது இந்தப்
பாரளந்தத்திரு மாயனும் வேதனும்
பார்த்துக்களித்த துண்டு

பார்ப்பதிஎன்ருெரு சீமாட்டியதில்
பாதியைத்தின்ற துண்டு இன்னும்
பாதியிருக்குது பறையாநீயும்போய்ப்
பாரென்றுத்தாரந் தாருந் தாருந் தாருமையே (பித்)

வ-ம்:—சுவாமி! எனது பித்தத்தைப் போக்கவல்ல மருந்து பேரின்பந் தரக்கூடிய சிதம் ரக்ஷேத்திரத்தில் வீற்றிருக்கிறது. அதை ஒருமுறை தெரிசிக்கவுத்திரவு கொடுத்தால் என் சித்தப்ரம்மை நீங்கும் பித்தசாந்தியாகும்.

மிரா. வ-ம்:—ஆ! அப்படியா சமாச்சாரம். "தவத்தளவேயாகுமாம் தான்பெற்ற செல்வம் குலத்தளவேயாகும் குணம்" என்னும் பெரியோர் வார்த்தைக்கிடாக என்னிடமே உன் குலானுசாரத்தைக் காட்ட வந்துவிட்டாயல்லவா? சீ சீ மடையா.

## மிராசுதாரர் பாட்டு

இராகம்-முகாரி, தாளம்-ஆதி.

பல்லவி

சிதம்பர தெரிசனமா நீயதை
சிந்திக்கலாமா பறையா (சி)

அநுபல்லவி

சிதம்பரதெரிசனஞ் சதுர்மறையோர்கள்
செய்வது ஞாயம் நீ
சொல்வது மாயம்
சொல் லாதே இங்கே
நில் லாதே
சேரிக்குப்போடா நாளைக்குவாடா (சி)

சரணம்

ஜனகமகாமுனி யோகிகள்தேடிய
கனகசபேசனைக் கண்டறிவாயோ
பேசாதேகையை வீசாதே
வீரணைத்தொழடா ஏரியைஉழடா (சி)

வ-ம்:—பறப்பயலே! நீ கெட்டகேட்டுக்கு சிதம்பரதெரிசனமா மரியாதையாக வயக்காட்டுவேலையை கவனியடா உன்னை நம்பி இந்த வருஷம் என் மாசூல் கெட்டுவிட்டது. அதுபோனால் போகட்டு மென்றால் உன்னுடன் மார்கொடுக்க என்னால் முடியவில்லை. இனி ஒருமுறை சிதம்பரம் என்ற பேச்சை எடுத்துக் கொண்டு வராதே போடா போ என்முன் நில்லாதே.

[வேதியர் உள்ளே போகிறார்]

நந் வ-ம்:—அய்யோ இனி நானென் செய்வேன். எல்லாம் வல்ல இறைவன் செயல், என்னை இவ்விதம் பரிசோதிக்கிறதுபோலும் ஈசனே என்னை யாட்கொண்ட கனக சபேசனே. திருவாதிரை நக்ஷத்திரத் திருநாள் நெருங்கிவிட்டதே நின் தெரிசனம் காண்பதெப்போ. என் ஜென்மசாபல்ய மாவதெப்போ.

## நந்தனார் பாட்டு

(முத்துக்குமாரையனே என்ற மெட்டு)

பல்லவி

சபாபதி நாதனே தற்காத்தருள் நீதனே (சபா)

அநுபல்லவி

சபலமேவுமன திருளை நீக்கி சுக
ஜனக ஞானந்தாதா மாசிலா

சரணகமலபாதா போற்றினேன்
தாசனென்மேல் வாதா சூதா (சபா)

சரணம்

தாய்வயிற்றில் நர ணுயுதித்த அவ
தாரம்போதுமையா மன தின்வி
சாரம் தீருமையா வெகுவுப
காரம் பாருமையா மெய்யா (சபா)

கங்கைதங்கு சடை யுங்குலுங்க நட
னம் புரிந்த யீசா சங்கர
லிங்கனின் க்ருபேசா சிதம்பரந்
தங்குமதி விலாசா நேசா (சபா)

(சீன் முடிவு.)

## சீன்—13. இடம்—மிராசுதாரர் வீடு.

நடிகர்:—மிராசுதாரர், கிருஷ்ணம்மாள், நந்தன்.

கிருஷ்ணம்மாள். வ-ம்:—உங்களைத்தானே காலமே நீங்க வயக்காட்டுக்குப் போயிருக்கச்சே செட்டி வந்தான். ஒரு அட்டியல் கொடுத்தான் அதை வாங்கி வச்சிருக்கேன் பார்த்தேளா.

மிராசுதார். வ-ம்:—பாக்ர தாவது; ஒருவேளை இது சின்னதாய் இருக்குமோ என்னமோ போட்டுண்டு பாத்தியா.

கிரு. வ-ம்:—போட்டுண்டு பார்த்துதான் உங்களிடம் காட்ட வந்தேன்.

மிரா. வ-ம்:—நண்ணுயிருக்கு ஞாயம். என்ன விலையாம்.

கிரு. வ-ம்:—அசல் சீமைக்கமலம்தானே எண்ணுயிரம் ரூபாயாம்.

மிரா. வ-ம்:—எண்ணுயிரமா?

கிரு. வ-ம்:—எண்ணுயிரந்தான் மகா பிரமாதம். நம்மைப்போலக் கொத்தவா வீட்டுக்குப்போனு ஒவ்வொத்தர் போட்டிண்டிருக்கிறதே பார்த்தா எனக்கு ரொம்ப வெக்கமாயிருக்கு. கோபாலையர் ஆம்பிடையா கழுத்திலே இருக்கிற பதுகம் மட்டும் 12-ஆயிரமாம். ராமஸ்வாமையர் ஆம்பிடையா மூக்குப்பொட்டு 4-ஆயிரமாம் அவர் கொழந்தே கழுத்திலே இருக்கிற பதுகம் மட்டும் 8-ஆயிரமாம். அவாளென்ன நம்மெவிட ஒசத்தியா

மிரா. வ-ம்:—நான் சொல்ரதைக் கேள்: ரெண்டு வருஷமா வெளச்சல் நண்ணு இல்லே அது உனக்கு நண்ணு தெரியும்; பண்ணக்காரன்களுக்கெல்லாம் கடன் கொடுத்திருக்கோம். இந்த வருஷம் நம்ப நந்தம் பயலாலே நஞ்செயெல்லாம் பாழா போச்சு.

4 B

இப்படியிருக்கச்சே எண்ணூயிரம் ரூபாயிக்கு எங்கே போரது. கோவிச்சிக்காதே அடுத்த வருஷம் வாங்கித் தாரேன்.

கிரு. வ-ம்:—அடுத்த வருஷம் அடுத்த வருஷம் அடுத்த வருஷம் எண்ணு சொல்லிண்டே இருங்கோ. அடுத்த வருஷம் கொழந்தைக்கி சாந்திமுகூர்த்தம் செய்ணுமோ; இல்லியோ? அந்த செலவெ பாப்பிங்களா. அட்டிகை வாங்குவிங்களா.

மிரா. வ-ம்:—அட செலவோடெ செலவு. உன் வேலையை முடிச்சிக்‍ரேன் கோவிச்சிக்காதே. [நந்தன் வருகிருன்]

நந். வ-ம்:—சுவாமி நமஸ்காரம்.

மிரா. வ-ம்:—நீ உள்ளே போ. ஏண்டா பறப்பயலே! மறுபடியும் எதற்காக இங்கு வந்தாய்.

நந். வ-ம்:—சுவாமி! கோபிக்கவேண்டாம்; அடிமை வார்த்தையை அங்கீகரிக்க வேண்டும்.

மிரா. வ-ம்:—என்னடா நானுன் வார்த்தையைக் கேட்பது.

## நந்தனர் மிராசுதாரர் தர்க்கம்

கண்ணிகள்

நந். மார்கழிமாதந் திருவாதிரைநாள் வரப்போகுதையே
மனதைப்புண்ணுகப்பண்ணுமலொருதரம் போய்வாவென்று [சொல்லையே

மிரா. மாடுதின்னும்புலையாவுனக்கு மார்கழித்திருநாளோ
தேடியெடுத்தாயாரிடத்தேபோய் தீண்டாதேபோடா

நந்தன். கட்டையிருக்கையிற் சிதம்பரம்போய்நான்
காணவேணுமையே
கசடனுகினுமாசை விளையுதுன்
காலுக்குக்கும்பிடையே

மிரா. ஆடுதின்னும்புலையா வுனக்கு
ஆனித்தெரிசனமோ
நாடுசிரிக்கும் வார்த்தைகளன்றோ
நாடாதேபோடா

நந்தன். காலில்நகமுளைத்த நாள்முதலாயுமக்
கடிமைக்காரனையே
காலபாசத்தில் காட்டிக்கொடாமற்
காப்பாற்றிடுமையே

மிரா. நண்டுக்குக்கலியாணம் ஊளை
நரிக்குச்சங்கராந்தி
பண்டிக்குப்பூசத் திருநாளுண்டோ
பறையாநீபோடா

மிரா. வ-ம்:—அடுத்தடுத்து சொல்வதை தடுத்துத்தடுத்து மகா சிவ பக்தனைப்போல் என்னிடம்வந்து முறையிடுகின்றாய். கடைசியாகச் சொல்கிறேன். என் வார்த்தையை மீறுவாயாகில் கட்டாயம் உதைபடுவாய்.

## விருத்தம்

நாற்பதுவேலிபூமி நடவுநட்டாகவில்லை
பார்ப்பதுமில்லைசைவப் பழமது தின்றாய்ப்பண்ணை
கார்ப்பதுமில்லையுன்னைக் கைவிடமன துவல்லை
சேர்ப்பதாலாவதில்லைச் சேரியிற்றொலைந்துபோடா.

மிரா. வ-ம்:—உன்னிஷ்டப்படி நீ சிதம்பரம் செல்லவேண்டுமாகில், எனது நாற்பதுவேலி பூமியை உழுது பயிர்செய்து, அருவடையாக்கிவிட்டுப் போ. அல்லது, சேரிக்குச்சென்று உன் வேலையைப்பார்.

[வேதியர் உள்ளே போகிறார்]

## நந்தன் பாட்டு

(ஐயையோ என் செய்குவேன் என்ற மெட்டு)

கண்ணிகள்

இலவுகாத்த கிள்ளையாச்சே-நான்
எடுத்துச்சொன்னதெல்லாம் போச்சே
பறையன்சொல்வதுபழு தாச்சே-நீங்கள்
பார்ப்பாரென்பதுமே லாச்சே
ஏழைச்சொல்லம்பல மாச்சே-தெய்வ
மில்லாமலெங்கேயோ போச்சே
சேரியேசொர்க்கமென் றாச்சே-தில்லைச்
சிதம்பரமென்பது போச்சே

[நந்தன் உள்ளே போக]

(சீன் முடிவு)

---

## சீன்—14. இடம்—வயல்.

நடிகர்:—நந்தன், கிட்டுவையர், மிராசுதாரர், ஈஸ்வரன்.

நந். வ-ம்:—ஹே சங்கரா! ஜனனந்தத் தாண்டவா! அடியேனென்னையாண்டருள யின்னம் மனமில்லையா! பக்தனென் பரிதாபமுறையுனது திருச்செவிக் கேற்கவில்லையா! ஏழையாகிய யான் படுந் துன்பமான துனது கண்ணுக்குத் தோற்றவில்லையா! சர்வலோக சரண்யனாய் சர்வஜீவகோடிகளுக்குந் தாய்தந்தையாய் சர்

வேஸ்வரனுய் சர்வபரிபூரண அகண்ட தத்துவமான சச்சிதானந்த சிவமாய் பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணனந்தமாய் இகபரமிரண்டினிலு முயிரினுக்குயிராகி எங்கு நிறைகின்றபொருளாய் கருதரிய சிற்சபையிலானந்த நிர்த்தமிடு கருணகரக்கடவுளாய் தெரிவதற்கரிய பிரம்மமாயமலசிற்சுகோதய விலாசமாய் முத்தொழிர்க்கொருவனுய் முழுமுதர்க்கடவுளாய் விளங்கும் பராபரப் பொருளே! பாவிப் பறையனென்மேல் பக்ஷமில்லையா? கருணையில்லையா? தயவில்லையா? ஜனக ஜனர்த்தன தவசிரேஷ்ட்டர்களுக்கு சொல்லாமற் சொல்லி சுகமீந்து ரக்ஷித்த சுயஞ்சோதியே! பார்க்க முத்தி தரும்படியான நின துக்ஷேத்திரத்தைப் பாவிப் பார்க்கலாகாதா! மார்கழிமாதத் திருவாதிரை நாளென்ற சப்தம் ஊரெங்கு முழங்குகிறதே? கோடானுகோடி பக்தர்கள் செல்கின்றனரே? ஹே பரமதயாளா! பதுமமலர்த்தாளா! பசுபதி இதுவுநின் சோதனையா! என்னை யடிமைகொண்ட வேதியர் இளகாதசித்த முடையவராய் என்னைக்கோபித்து அடிப்பதுமின்றி சிதம்பரஞ் செல்லலாகாதெனச் சொல்லுகின்றரே? ஜெகதீசா! இதற்கு நான் என்செய்வேன்? நாற்பதுவேலிபூமியையும் பயிரிடயேழை என்னுலாகாதே? எப்போதிவ் வேலையைச் செய்து முடிப்பது? எப்போது வேதியரிடம் வுத்திரவுபெறுவது? எப்போதுன் சந்நிதானத் தடைவது? ஒப்பாருமில்லாத அப்பனே.

## நந்தன் விருத்தம்.

படமுடியாதினித்துயரம் படமுடியாதரசே நான், பட்டதெல்லாம்போதுமிந்தப் பயந்தீர்த்திப்பொழுதென், உடலுயிராதியவெல்லாம் நீஎடுத்துக்கொண் டுன்னுடலுயிராதியவெல்லா முவந்தெனக்கே யளிப்பாய், வடலுறுசிற்றம்பலத்தேவாழ்வாய் என் கண்ணின் மணியே என்குருமணியே மாணிக்கமணியே, நடனசிகாமணியே ஞானநன்மணியே பொன்மணியே நடராஜமணியே.

நந். வ-ம்:—அங்கு இங்குகெனுதபடி எங்கும்பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாய் அனைத்துயிர்க்கும் அன்னையாய் மும்மூர்த்தியாய் முக்கண்ணனுய் விளங்கும் பக்தவத்சலா! சதாசிவா! சாம்பசிவா! மகாதேவா! மகானுபாவா! மன்றுளாடியவா! மதகரியுரித்தவா! பாவிப்பறையனை என்முகம் பார்க்கொணுதா உன்மனமென்ன கல்லா? அல்லதிரும்பா? இவ்விரண்டுக்கு மேற்பட்ட எழுகா? இரும்பானு லுருகுமே! கல்லானல் கறையுமே! எழுகானு விளகுமே! பிறைமதிசூடிய ப்ரபுவே! எண்ணுதர்க்கரிய ஜீவகோடிகளில் அமைந்த மானிடப்பிறப்பில் பிறந்த நானுமொருவன் தானே? இப்பிறவிகொடுத்த என்னப்பன் நீதானே? பிறக்கமுத்தி நினைக்கமுத்தி தெரிசிக்க முத்திதரக்கூடிய எம்பெருமானே!

இதுவுமுன் சோதனையா! என்பொருட்டு னக்கிவ்வித நல்நெஞ்சு வந்தக் காரணமென்ன? நாளையமறுநாள் திருவாதிரையல்லவோ? வேதியர் வார்த்தையின்படி நாற்பது வேலிபூமியை யேருழு வேனு? பரம்படிப்பேனு? நாத்துநடுவேனு? நீர்பாய்ச்சுவேனு? என்னசெய்வேன்; எப்போது வேதியரிடம் விடைபெறுவேன்; எப்படி நினது திருவாதிரை திருநாளை தெரிசிப்பேன்; எம் பெருமான் எளியேனை இந்தப்பறையனது ஜென்மமீடேறவும் சிதம்பரத்தை தெரிசிக்கவும் அய்யரின் அடிமைத்தனம் விலக வும் கிருபை செய்யவேண்டும்.

[களைத்து நந்தன் தரையில் சயனிக் கிருன். ஈஸ்வரன் கனவில்தோன்று தல். இந்த சீனில் ஈஸ்வரன் இர ண்டு காளைகளுடன் கழனியில் தோ ன்றி ஏருழுது பயிர்செய்து மறை தல் கிட்டையர் வந்து பார்த்து]

கிட். வ-ம்—ஆ! ஆ! இதென்ன ஆச்சரியம்! நாற்பதுவேலி பூமியும் அறுவடையாகும்படி கதிர்களோங்கி செழிப்புற்றிருக்கிறது. நந்தன் அயர்ந்து நித்திரை செய்கிருன் இதென்ன காரணமோ தெரியவில்லை நந்தனுடைய பக்திக்கிரங்கிய பக்தரக்ஷகனை பரமேஸ்வரனது திருவிளையாடலன்றி வேறில்லை எதற்கும் நமது ஐயரைக் கூட்டிவந்து காட்டுவோம்.

[உள்ளே சென்று மிராசுதாரருடன் வெளிவந்து]

கிட். வ-ம்:—பார்த்தீர்களா நமது வயலை; நெற்பயிர் விளைந்து அறு வடையாகிற நிலமையி லிருக்கிறது.

மிரா. வ-ம்:—என்னடாயிது! ஆச்சர்யம்.

## மிராசுதாரர் கிட்டுவையர் பாட்டு

## (உறங்குகின்ற கும்பகர்ண என்ற மெட்டு)

களையெடாமல் ஜலம்விடாமல்
கதிரொரு முழங் காணுமாம்
களிக்குதுபயி ரிருக்குது அதைக்
கட்டுகட்டத் தோணுமாம்
பழுதிலாம லேரிகுளங்கள்
பள்ளமேடு தண்ணியாம்
பரமசிவனைப் பணியும் நந்தன்
பயிரிடுகிற பண்ணையாம்

[நந்தன் எழுந்து மிராசுதாரரைப் பணிகின்ருன்]

மிரா. வ-ம்:—நந்தா! இதென்ன ஆச்சரியம்! பூமி முழுதும் பயிர் விளைந்திருக்குங் காரணமென்ன?

நங். வ-ம்:—சுவாமி! தாங்களறியாத காரணமொன்றில்லை. என்னை யாட்கொள்ளும் கனகசபேசன் திருவருளே இதற்குக் காரணமாகும்.

மிரா. வ-ம்:—நந்தா! இதுவரையில் உனது மகிமையறியாமல் நான் செய்த அட்டூழியங்களை மனதில் நினையாதே. உண்மையான உனது பக்தியை அறியாத இந்த,

## மிராசுதாரர் பாட்டு

மிரா. ஏழைப்பார்ப்பான் செய்தபிழையை
யேற்றுக்கொள்ளாதே
இனமறியாதவன் பின்புத்திக்காரன்
என்பதும்பொய்யோ (ஏ)

நங். பொய்யாகியஇந்த உலகத்தைப்பார்க்கும்
புண்ணியவானே நான்
புலையனுங்களடிமையல்லவோ புத்திசொல்லுமையே (பொ)

மிரா. புத்தியுண்டு வித்தையுண்டு
பக்திகிடையாது வாயால்
புலம்பினதாலென்மனமடங்காது போதங்கிடையாது (ஏ)

நங். கிடைக்குஞ்சிதம்பர தெரிசனமென்று
கிருபைசெய்யுமையே நான்
கீழ்க்குலமல்லவோநாயினுங்கடையேன் கீர்த்திதருவீரே ()

வ-ம்:—சுவாமி! கீழ்க்குலத்தினன்; அதிலுந் தங்களுக் கடிமையான பறையனுக் கிந்த பணிவான உபசாரங்கள் செய்வது தங்களுக் கடாது. வீண்பழியை என்மேல் சுமத்தவேண்டாம்.

மிரா. வ-ம்:—நந்தா! உன்னிலும் உத்தமன் உலகத்துண்டா? ஐயோ! அறியாத்தனமாக உனக்குப் பெரும்பிழைகளைச் செய்து நானன்றோ உன் பழியை யேற்றுக்கொண்டேன்.

## வேதியர் பாட்டு

இராகம்-ஆனந்தக்களிப்பு.

நந்தாநீசிவ பக்தன்-உன்னை
நம்பாமலேமோசம்போனேனே பித்தன் (நந்)

பூமிக்குள்நீயொரு சித்தன்-இந்த
பூமிக்குநானொருசாஸ்திரப் பித்தன் (நந்)

காமிக்குள்ளேவெகு மத்தன்-உன்னைக்
கண்டுதெரிசித்தபேர்களே முத்தன் (நந்)

வ-ம்:—நந்தா! உன்போன்ற பக்தசிகாமணியும் இவ்வுலகத்துண்டா: உனது மகிமையறியாமல் பினத்திய நானன்றோ பித்தன். என் போன்ற உன்மத்தனுக்கு பரமேஸ்வரன் கருணை பாலிப்பாரா?

நந். வ-ம்:—சுவாமி! எங்கும் நிறைந்த எம்பெருமான் எல்லோருக்குங் கருணை பாலிப்பாரென்ற வார்த்தை பிசகுமா?

மிரா. வ-ம்:—ஆமாம்; நந்தா! இங்கு நிகழ்ந்த காரியமென்ன? இந்தப் பூமி முழுதும் விளைந்த விவரமென்ன? தயவுடன் தெரிவிக்க வேண்டும்.

நந். வ-ம்:—சுவாமி! அடியேன் சிதம்பரம் செல்லத் தாங்கள் மறுத்து வெறுத்து கோபித்ததை முன்னிட்டு, வெகு வியாகூலத்துடன் பகவானை சிந்தித்து இங்குவந்து படுத்துவிட்டேன். நடராஜ மூர்த்தியின் கிருபையால் நிலங்கள் விளைந்து தங்களிடம் விடை பெற்றுச் சிதம்பரம் போவதாகக் கினவுகண் டெழுந்தேன்.

மிரா. வ-ம்:—நந்தா! உன்போன்ற பக்திபுரியும்படி இவ் வேதியனுக்குச் சிறிது நல்லுபதேசம் செய்யவேண்டுகிறேன்.

## நந்தனர் பாட்டு

பல்லவி

ஐயேமெத்தக்கடினம் உனக்கடிமை
ஐயேமெத்தக்கடினம் (ஐயே)

அநுபல்லவி

பொய்யாத பொன்னம்பலத் தையா இருக்குமிடம்
நையாதமனிதற்கு வுய்யாதுகண்டுகொள்ளும் (ஐயே)

சரணம்

பாலகிருஷ்ணன்பணிந்திடுஞ் சீலகுருசிதம்பரம்
மேலேவைத்தஆசையாலே காலனற்றுப்போவானென்று
சாத்திரம் நல்ல
க்ஷேத்திரம் நிற்
பாத்திரம் ஞான
நேத்திரம் கொண்டு (ஐயே)

வாசியாலேமூலக்கனல் வீசியேசுழன் றுவர
பூசைபண்ணிப்பணிந்திடு மாசறக்குண்டலியைவிட்
டாட்டுமே மன
மூட்டுமே மே
லோட்டுமே வழி
காட்டுமே எந்தன் (ஐயே)

வ-ம்:—சுவாமி! எல்லாம் தெரிந்த தங்களுக்கு இதற்குமேல் அடியேன் சொல்வதென்ன இருக்கிறது. இனியாவது நான் சிதம்பரம் சென்றுவர உத்திரவு கொடுக்கக் கோருகிறேன்.

### மிராசுதாரர் பாட்டு

இராகம்-சாமா, தாளம்-ஆதி.

பல்லவி

சிதம்பரம்போய்நீர் வாருமையா நான்
செய்ததெல்லாமப சாரமையா (சித)

அநுபல்லவி

சிதம்பரம்போவீர் பதம்பெறுவீர் வேறே
சிந்தனைவேண்டாம் நந்தனேயினிமேல் (சித)

சரணம்

எத்திசையிலுமுமக்கிணைசொல்லப் போமோ
பத்தியேமுதலென்று பழகியபெரியவர் (சித)

சித்தமுந்தெளிந்து தெய்வமேநீரென்று
புத்தியும்வந்தது சத்தியமல்லவோ (சித)

[இருவரும் பிரிதல்]

(சீன் முடிவு)

---

**சீன்.—15.** **இடம்—சிதம்பரம் மாடவீதி.**

**நடிகர்:—பரமேஸ்வர தீக்ஷதர், கயிலாச தீக்ஷதர், குஞ்சிதபாத தீக்ஷதர், சிற்றம்பல தீக்ஷதர், நந்தனர்.**

பரமேஸ்வரதீக்ஷ. வ-ம்:—ஓய் கயிலாசல தீக்ஷிதரே இதென்ன விந்தையா யிருக்கிறதே. நான் இன்று கண்ட கனவைப்போல் என்றும் பார்த்தது மில்லை பார்த்தவர் சொல்லக் கேட்டது மில்லை.

கயிலாசலதீக்ஷ. வ-ம்:—நானும் அதைத்தான் சொல்ல விரைந்து வருகிறேன். அடடா என்ன விசேஷம் என்ன மகத்துவம் எல்லாம் நடராஜப் பிரபுவின் அனுக்ரகந்தான்.

[எதிரே குஞ்சிதபாத தீக்ஷதர் சிற்றம்பல தீக்ஷதர் இருவரும் வரக்கண்டு]

பர. வ-ம்:—வாருங்கள் வாருங்கள் வாருங்கள் என்ன காரணம் இருவரும் யேகோபித்து இத்தனைத் துரிதத்தில் வருகின்றீர்கள்.

# நந்தனர் சரித்திரம்

குஞ். வ-ம்:—காரணமான கனவுதான். நமது நடராஜாவே என் கனவில் தோன்றி மறைந்தார்.

சிற்றம். வ-ம்:—என் ஜென்மத்தில் ஒருநாளாவது பார்த்திராத சொர்ப்பனம் பகவான் பக்தருக் கடக்கம் என்பது பழுதாகுமா?

கயிலா. வ-ம்:—ஆதனூர் சேரியில் வசிப்பவனும் அவன் பெயர் நந்தனும் ஈஸ்வரபக்தியில் இணையற்றவனும். நடராஜமூர்த்தியின் நடனசபா தெரிசனஞ் செய்யவேண்டி வந்திருக்கின்றானும். ஊருக்கு வெளியே திரிந்தலைந்து நிற்கின்றானும். நாம் யாவரும் அவனை எதிர்கொண் டழைத்து வந்து அக்கினியில் மூழ்கச் செய்து சந்நிதான சேவைக்கழைத்து வரவேணுமென்று சொர்ப்பனத்தில் சொல்லி மறைந்தார் சுவாமி.

பர. வ-ம்:—என் கனவிலும் அவ்விதமே பிரசாதித்தார்.

குஞ். வ-ம்:—எனக்கும் அவ்விதமே கடாக்ஷித்தார்.

சிற்ற. வ-ம்:—நானும் இதே கனவு கண்டுதான் உறக்கத்தை விட்டு உங்களைத் தேடி வருகிறேன்.

குஞ். வ-ம்:—எதுவாயினும் சரி; பகவானது உத்திரவை பரிபாலிப்பது நமது கடமை வாருங்கள் எல்லோருமாகச் சென்று நந்தனைத் தேடிக் கூட்டிவரலாம்.

பர. வ-ம்:—சிவபெருமான் உத்திரவின்படி திருநாளைப்போவாரைத் தேடிப் பார்க்கலாம் வாருங்கள்.

[நந்தன் உள்ளிருந்து வெளிவருதல்]

## நந்தன் பாட்டு

பல்லவி

இதுதானோ — தில்லைத்தலம்
இத்தனைநாளு — மறியேன் (இது)

அநுபல்லவி

அதுவோ இதுவோ என்று — அலைந்திடும் பேயனை
கதிதருவேனென்று — கைகாட்டி யழைத்திடும் (இது)

சரணம்

காசினியிலிதைக் — கயிலையென் றெல்லோரும்
பேசக்கேட்டதேயன்றி — பேணிப்பார்த்தறிகிலேன் (இ)

கயி. வ-ம்:—ஓய் ஓய் இதோ எதிரில் வரும் ஆசாமியைப் பாருங்கள் சுவாமி சொன்ன அங்கஅடையாளங்கள் சரியாயிருக்கிறதே.

பர. வ-ம்:—வாஸ்தவந்தான் இவரே திருநாளைப் போவாரென்பதில் சந்தேக மில்லை.

# நாடக நடிகர்கள்

| | |
|---|---|
| நந்தன் | கதாநாயகன் (பறையன்) |
| தோப்புளான் | ஷை யான் சிநேகிதன் |
| தாண்டவராயன் | ஷை யான் பந்து |
| படவேட்டான் | ஷை யான் பாத்தியஸ்தன் |
| பாவாடை | ஷை யான் சொந்தம் |
| மாரியாத்தா | ஷை பறைச்சி |
| ஏகாத்தா | ஷை பறைச்சி |
| கிட்டுஜயர் | பிராமணர் (மிராஸ்தாரரின் வேலைக்காரர்) |
| பெரியகிழவன் | பறையர்களின் நாட்டாண்மைக்காரன் |
| வள்ளுவன் | ஷை யாரின் புரோகிதன் |
| வேதியர் | மிராஸ்தாரர் (பிராமணர்) |
| கிருஷ்ணவேணி | ஷை யாரின் மனைவி |
| பரமேஸ்வரதீக்ஷிதர்<br>குஞ்சிதபாததீக்ஷிதர்<br>சிற்றம்பலதீக்ஷிதர்<br>கயிலாசதீக்ஷிதர் | சிதம்பரம் அர்ச்சகர் |

அடியார்கள், தாசி, நட்டுவன் முதலியோர்

நாடகம் நிகழிடம்:

ஆதனூரிலும், சிதம்பரத்திலும்.

அநுபல்லவி

பரமகிருபாநிதி யல்லவோ இந்த
பறையனுபசாரஞ் சொல்லவோ உந்தன்
பரமானந்தத்தாண்டவம் பார்க்கவேநானிங்கு (வ)

சரணம்

பூமியில்புலையனுய்ப் பிறந்தேனே நான்
புண்ணியஞ்செய்யாம லிருந்தேனே
சாமியுன் சந்நிதி வந்தேனே பவ
சாகரத்திலுயு மிழந்தேனே கரை
கடந் தேனே சரண
மடைந் தேனே தில்லை
வரதாபிர தாபமுந் தீரவேநானங்கே (வ)

[சந்நிதியில் ஜோதிவுதய மாகிறது. நந்தனர் ஜோதியில் ஐக்கியமாகிறார். சீன் முடிகிறது]

(எல்லோரும் பாடுதல்)

நந்தச் சோபனமே தானன்புக்கே மனமே
ஆலிங்கனஸ்தாபனமே மேலுங்கண்டோ முனமே

ஆரம்பம் பாரெங்கும் ஆணும்பெண்ணுந்தான்
சேரும்பண்பே கொண்டுந் தோணுங் கண்ணுந்தான் (ஆ)

அதிமதுரிதரகசிய முண்டாருக்குத்தான்
பொதுவிதி யிதுமதி பேசும்பேருக்குத்தான்

ஆமுத்தி நூலுக்கிதே செப்புமே
மாமுத்து சாமிக்குளே ஒப்புமே (ஆ)

நாடகம் முற்றுப்பெற்றது

சுபம்! சுபம்!! சுபம்!!!

---

திருமகள் விலாசம் பிரஸ், சென்னை:—1932.

குஞ். வ-ம்:—ஐயா! தாமெங்கிருந்து வருகின்றீர்.

நந். வ-ம்:—ஆதனூரிலிருந்து வருகிறேன்.

சிற். வ-ம்:—ஓ ஹோ! திருநாளைப் போவாரென்னும் நந்தனரே! உம்மீது கருணை பாலித்த நடராஜ மூர்த்தியின் அனுமதிப்படி உம்மைத் தேடி வருகிறோம். பரமபாவன பக்தரே எம்முடன் வாரும்.

நந். வ-ம்:—உத்திரவின்படி.

(சீன் முடிவு.)

---

## சீன்—16. இடம்—அக்கினிகுண்டம்.

நடிகர்:—நந்தனர், பரமேஸ்வர தீக்ஷதர், சிற்றம்பல தீக்ஷதர், குஞ்சிதபாத தீக்ஷதர், கயிலாச தீக்ஷதர்.

[எல்லோரும் நந்தனை அழைத்து வெளிவந்து]

கயி. வ-ம்:—திருநாளைப்போவாரென்னும் சிறப்புப்பெயர் பெற்ற திவ்யோத்தமரே! இதோ தோன்றும் தீக்குழியில் மூழ்கி வெளியேறுவீராகில் சிற்சபைக் கழைத்துச் செல்வோம்.

[வணங்கி வணக்கத்துடன்

நந். வ-ம்:—சுவாமி! அவ்விதமே ஆகட்டும்.

அரஹரசிவசிவ அம்பலவாண [இதைப் பாடிவிட்டு]

[தீயில் மூழ்கி வேற்றுருவத்துடன் வருகிறார். தீக்ஷதர்கள் வெகு மரியாதையாக அழைத்துப்போகின்றனர்.]

(சீன் முடிவு.)

---

## சீன்—17. இடம்—நடராஜராலயம்.

நடிகர்:—நந்தன், தீக்ஷதர்கள்.

தீக்ஷ. வ-ம்:—வாருங்கள்! வாருங்கள்! இதுதான் ஸ்ரீ நடராஜப்பெருமான் திருச்சன்னிதானம். தெரிசனம் செய்யுங்கள்.

### நந்தனர் பாட்டு

பல்லவி

வருகலாமோ ஐயா வுந்தன்
அருகினில்நின்றுகொண் டாடவும்பாடவும் (வருக)

# முகரசிகம்

சிவசைவ சமய பக்தரும் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவருமாகிய நாளைப்போவாரென்னும் நந்தனாரின் சரித்திரத்தைக் கீர்த்தனரூபமாக ஆதியில்இயற்றியவர் ஆனைதாண்டாபுரம். ஸ்ரீமான்: கோபாலகிருஷ்ண பாரதியாராவர். இம்முத நூலைத் தழுவி ஏனைய நாடகக் கம்பெனியார்கள் இதை நாடகரூபமாகத் தமிழ் நாடகமேடையில் நடித்துக்காட்ட ஆரம்பித்தனர். ஆதியில் இக்கதையை நாடக மேடையில் அரங்கேற்றுவித்தது ஸ்ரீமான்: தி. நாராயணசாமிப் பிள்ளை என்பார் சிலர்; சிலர் மற்ற கம்பெனியாரைச் சொல்வர். இஃதெங்ஙனமாயினும், தற்காலத்திய நடிகர்களால் இந்நாடகச் செல்வாக்குச் சிறிது குறைந்தே காண்கிறதென்ப துண்மை. இதற்கு முக்கிய காரணம் என்னவெனில், சில நடிகர்கள் பாடல்களைப் பாடுவதிலேயே புத்தியை செலுத்துவதே யல்லாமல், கதையின் சந்தர்ப்பத்திற்குத்தக்கபடி வசனங்களை பேசுவதில்லை என்பதேயாம். இதை யுத்தேசித்து இந் நாடகத்தைக் கதானுசாரங் குறையாமலும், ஷை பாரதியாரவர்களின் பாடலைத் தழுவியும், என்னுக்திக்கேற்ற புதிய வசனக் கோர்வைகளுஞ், சிற்சில சந்தற்பானுசார பாடல்களும் இயற்றி, எனது ஸ்ரீ பாலவிநோத நாடக சபா பால்யர்களுக்குப் பாடங்கொடுத்து நடித்துக்காட்டி நற்பெயர் வகிக்கச் செய்ததைக் கண்ட, ஏனைய நாடகாபிமான நண்பர்கள் இதை அச்சிட்டுத் தர வேண்டுமென்பதற் கிணங்கித் தற்காலம் இதை வெளியிடலானேன். ஆகவே, நாடகாபிமான சகோதர சகோதரிகள் பலரும் இந் நாடகத்தை அங்கீகரித்து எனது வித்யாபிவிருத்தியைக் கருதுவதுடன், இதுபோன்ற பல நாடகங்களை எழுதுமாறு என்னை உற்சாகப்படுத்தி ஆசீர்வதிப்பீர்களென்று பிரார்த்திக்கின்றேன்.

அன்றியும், இந்நூலின் சகல வுரிமைகளும், சென்னை: மெஸர்ஸ் B. இரத்தின நாயகர் அண்டு ஸன்ஸ் அவர்களுக்கே வுரியதாதலின், மற்றவர்கள் இப்புத்தகத்தையேனும், இதிலுள்ள பாடல்களையேனும் அச்சிட்டு வெளியிடில் புஸ்தக ரிஜிஸ்டர் சட்டப்படி சகல நஷ்டத்திற் காளாவார்க ளென்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

20-9-32
சென்னை.

அன்பன்:
கவிராஜ் ச. சு. சங்கரலிங்கன்.
நாடகாசிரியன்.

Copy Right and Rights of Translation in any other Languages, stcrtlyi reserved by the Publishers